
உ
சிவமயம்

# சைவநீதி
SAIVANEETHI



மலர் 21 | ஏவிளம்பி ஆடி | 2017 - July | இதழ் 4

ஏழாலை



இலக்கியகலாநிதி, பண்டிதமணி அமரர்
## மு. கந்தையா B.A.
நூறாண்டு அகவைச் சிறப்புமலர்

ரூபா.50/-

இவ்விதழ் வெளிவர ஆனுசரணை
திரு. வே. கனகசபாபதி அவர்கள்
திருமதி. ஞானலோஜினி கனகசபாபதி அவர்கள்

# பொருளடக்கம்


1. தலைவர் உரை ~ ~ ~ 02
2. பிரார்த்தனைச் செய்தி ~ ~ ~ 03
3. சைவத்தமிழ் கலாசாரத்தின் பிதாமகர் ~ ~ 04
4. வாழ்ந்துரை ~ ~ ~ 05
5. ஆசியுரை ~ ~ ~ 06
6. சைவத்தமிழ்க் காவலன் ~ ~ ~ 07
7. வாழ்த்துரை ~ ~ ~ 08
8. சைவசித்தாந்தியாக வாழ்ந்து காட்டியவர் பண்டிதர் ஐயா 09
9. அர்த்தமுள்ள நூற்றாண்டு ~ ~ 10
10. நாவலர் வழிவந்த சைவசேனாதிபதி ~ 11
11. இன்று நூற்றாண்டு நிறைவு ~ ~ 12
12. கைலாசபதி ஸ்மிருதி பற்றிய சைவசித்தாந்த நோக்கு 14
13. வாழ்க்கை வளம் ~ ~ 15
14. பண்டிதர் ஐயாவின் தடங்கள் ~ ~ 20
15. திருவருள் தரும் குரு(பண்டிதர்) அருள் ~ 21
16. ஊருணி நீரெனும் ஞானக்கேணி ~ ~ 24
17. சைவக் கலங்கரை விளக்கனைய ~ ~ 25
18. என் குருநாதர் ~ ~ ~ 26
19. ஏழாலை மண்ணில் மலர்ந்த சைவநறுமலர் ~ 29
20. தன் அழுக்கைத் தானே துடைக்க வேண்டும் ~ 30
21. அறிவின் சிகரம் ~ ~ ~ 33
22. கலை மேதை கந்தையா சித்தாந்த சரபம் ~ 36
23. ஏழாலையின் ஞான சூரியன் ~ ~ 38
24. தமிழ்ப்புலமை ~ ~ ~ 39
25. ஏழாலையூர் இலக்கியகலாநிதி பண்டிதமணி மு.க. ~ 43
26. தமிழர் சமய நெறிக்குப் பெயர் சைவம் அல்லதில்லை 44
27. விழா நிகழ்வுகள் ~ ~ ~ 47
28. நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள் ~ 48.

உ

சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சைவநீதி
SAIVANEETHY

# சைவநீதி

மலர் உ ஏவிளம்பி ஆடி

சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் இதழ் ௪

தொடக்குனர்:
கலாபூஷணம்,
ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி,
வித்துவான்
திரு. வ. செல்லையா

ஆலோசகர்
கலாபூஷணம்,
சைவப்புலவர்
திரு. சு. செல்லத்துரை

ஆசிரியர்
சைவப்புலவர்,
சித்தாந்தச்செம்மணி.
திரு. செ. நவநீதகுமார் M.A.

விநியோகம்
சித்தாந்தரத்தினம்
திருமதி. பத்மினி
ராஜேந்திரா

வெளியிடுவோர்
திருவாவடுதுறை ஆதீனம்
சைவசித்தாந்தப்
பயிற்சி மையத்தினர்
கொழும்பு.

No. 1/2, 'B' Block,
Govt. Flats,
Hospital Road,
Dehiwela.
Tel: 0779 008 286

## ஆசிரியர் உரை

தமிழர் தம் உயர்ந்த தத்துவம் சைவசித்தாந்தம் என்பது மேலைத்தேய அறிஞர்களாலும் போற்றப்பட்டதாகும்.

சைவத்தின் தொன்மையை ஆராய்ந்தவர்களும் சைவசித்தாந்தம் அக்காலத்தில் இருந்ததைச் சான்றுகளுடன் கூறியுள்ளனர்.

சைவசித்தாந்தம், காலந்தோறும் தோன்றிய ஞானியர், யோகியர், சமயகுரவர், சந்தானகுரவர், சைவப்பெரியார்கள் போன்றவர்களால் வளர்ச்சியடைந்தது.

இலங்கைத்திருநாட்டிலே தோன்றிய சான்றோர்களும் சைவசித்தாந்தவளர்ச்சிக்குப் பெரும் பணியாற்றியுள்ளனர். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் முதல் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், காசிவாசி செந்திநாதையர், சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்றோர் வரிசையில் ஏழாலை பண்டிதமணி மு. கந்தையா B.A. அவர்களின் பணியும் குறிப்பிடத்தக்கதாகும்.

சைவசித்தாந்த நெறியில் வாக்கும் வாழ்வும் ஒன்றி வாழ்ந்தவர் பண்டிதமணி மு. கந்தையா அவர்கள்.

எழுத்துத் துறை இவருக்கு கைவந்தகலை. பல ஆக்கங்கள் சைவநீதியில் வெளிவர எழுதித்தந்தார். அமரராகும் வரை ஒவ்வொரு சைவநீதியிலும் இவரின் ஆக்கம் வெளிவந்தது.

சைவர்கள் சைவராகவே வாழவேண்டும் என்பதில் அதீத அக்கறை கொண்டிருந்தார். எவர் நெறி தவறினாலும் துணிவுடன் சுட்டிக்காட்டுவார். வடமொழிப்புலமை இருந்ததால் கிரியை நெறியிலும் நிரம்பிய அறிவுடன் திகழ்ந்தார்.

இவரின் சிந்தனைகள் நூல்வடிவம் பெற்றுப் பலரின் அறிவுக்கு விருந்தாயுள்ளன.

இவ்வாண்டு அன்னாரின் பிறந்த நூற்றாண்டு. அவர் பிறந்து வாழ்ந்து சேவை செய்த ஏழாலையிலே அவருக்கு எடுக்கும் விழாவிலே சைவநீதி சிறப்பு மலராக வெளிவருவது மகிழ்வுக்குரியதாகும்.



உ

சிவமயம்

# தலைவர் உரை

வே.கனகசபாபதி, தலைவர், பண்டிதமணி மு. கந்தையா B.A., நூல்வெளியீட்டுக் கழகம்
(யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்).

எளிமையான தோற்றமும், சிவசிந்தனையும், தற்பெருமையில்லாத தன்னடக்கமும் கொண்டு வாழ்ந்த பெரியாரே பண்டிதமணி மு. கந்தையா அவர்கள். இவர் பேரறிஞர்கள் பலரையும், சைவசித்தாந்தப் பெருந்தகைகளையும் தந்துதவிய சிவபூமியாம் ஏழாலை மண்ணில் தோன்றிச் சுயகல்வி மூலம் பேரறிஞராகித் தன்னை முழுமையாகச் சிவப்பணிக்கு அர்ப்பணித்து மறைந்த பெருந்தகையாளர் ஆவார்.

நாம் சிறுவர்களாக இருந்த காலத்தில் எம்மத்தியில் வாழ்ந்த பண்டிதமணி ஏனையோர்களைவிட மிகவும் வித்தியாசமானவராக விளங்கினார். அவரை ஒருவரும் மகானாகக் கருதவில்லை. அவரது நடை உடை பாவனை யாவும் அவரை ஒரு சாதாரண மனிதராகவே காட்டியது. ஊரிலே அவரை ஒரு சாதாரண வாத்தியாராகவே கண்டனர். அவர் குடத்தினுள் குத்துவிளக்காகப் பிரகாசித்துக் கொண்டிருந்ததை எவருமே அறியவில்லை. பெரிய கல்லூரிகளுக்கோ, பல்கலைக்கழகங்களுக்கோ செல்லாது தானாகவே படித்துப் பெற்ற பட்டங்களையும் அறிந்திருக்கவில்லை. தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றுச் சைவசித்தாந்த சாகரமாகநின்று இறுதிவரை கொண்ட கொள்கையை நிலைநாட்டி அவர் படைத்த படைப்புக்களும் அதன் மூலமாக அவர் பெற்ற பட்டங்களும் அளப்பரியன. இலங்கையில் மட்டுமல்ல, இந்தியா, மலேசியா, கனடா போன்ற நாடுகளில் வாழும் சைவ அறிஞர்கள் பலரும் ஏன் சைவ உலகமே அவரை ஒரு பேரறிஞராகக் கண்டது. அவரது படைப்புகள் எண்ணிறந்தவை, சொல்லில் அடங்கா. இன்று சைவசித்தாந்த ஆராய்ச்சியாளர்கள் பலரும் அவரது படைப்புகளை உசாத்துணை நூல்களாகப் பயன்படுத்துவதிலிருந்து அவரது நுண்ணறிவு புலப்படும். யாழ். பல்கலைக்கழகம் அவரது நுண்ணறிவு கண்டு அவருக்கு இலக்கியகலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது. இன்று அவர் எம்மத்தியில் இல்லாத போதும் அவரது புகழ் உலகளாவிய ரீதியில் சைவ அறிஞர்களால் என்றென்றும் போற்றப்படும். அவரது படைப்புக்கள் யாவும் அவரது பேராற்றலையும், சிவப்பணியையும் போற்றி நிற்கும்.

எமது நெருங்கிய உறவினராகவும், அயலவராகவும் இருந்த தன்மையினால் அவருடன் சிறுவயதில் இருந்தே பழகும் வாய்ப்புக் கிடைத்தது. தந்தையாரின் வழிகாட்டலில் எனக்கு எங்கள் சாதுசங்கம மடத்தில் கோயில் கொண்டிருக்கும் கருணாகரப் பிள்ளையாரைத் தரிசிப்பதற்காகத் தினமும் காலை 5.30 மணிக்கு செல்லும் கட்டாயம் இருந்து வந்தது. அங்கு சைவ சித்தாந்த வித்தகர் மு. ஞானப்பிரகாசம் அவர்களையும், பண்டிதமணி அவர்களையும் எப்போதும் காணலாம். தந்தையார் மூலம் கிடைத்த அவர்களது சகவாசம் அவர்களைச் சிறுவயது தொட்டே மானசீகக்குருவடிவத்திலே காணவைத்தது. அவர்களது புராணபடனச் சிறப்புக்களும், திருமுறைப்பாராயணங்களும், தெய்வ வழிபாட்டு முறைகளும் என்னை மிகவும் கவர்ந்தன. ஆனால் அரச தொழில் நிமித்தம் கொழும்பிற்குச் செல்லவேண்டியிருந்தமையால் அவர்களது சகவாசம் விடுமுறையில் வரும்போது மட்டுமே கிடைத்து வந்தது. அதனால் அவர்களது சீடனாக இருக்கும் பேறு தடைப்பட்டது. அவரது பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளக் கிடைத்தமையை ஒரு பெரும் பேறாகக்கருதுகிறேன்.

அவர் பெயரில் அமைந்த நூல் வெளியீட்டுக் கழகம் அவர் வாழும் போதே **"திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரைவிளக்கம்"** எனும் நூலை வெளியிட்டது. அவர் மறைந்தபின் அவரைப்பற்றிய முழுமையான தகவல்களை உள்ளடக்கிய **"சித்தாந்த ஞானக்களஞ்சியம்"** என்னும் பெரு நூலையும், **அரியவும் பெரியவும்** மூன்றாம் பாகத்தையும் **சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள்** மறுபதிப்பினையும் வெளியிட்டது. இப்போது அவரது நூறாவது அகவை நிறைவு விழா நினைவாகச் **சைவநீதி சிறப்புமலர்** வெளியிடும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மகிழ்கிறோம்.



உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
(முதலாவது குருமஹா சந்நிதானம்)
ஆதீனகுரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்



021 222 2870 ஸ்தாபிதம் : 1966 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

10.05.2017



## பிரார்த்தனைச் செய்தி

சைவச்சான்றோர்களுக்கு!

ஏழாலைக் கிராமத்தின் சைவ சமய தமிழ்மொழி பண்பாட்டு விழுமியங்களுக்கு ஆதாரமாக இவ்வூரினுடைய பெருமையைப் பலர் முன்மொழிந்துள்ளனர். இவ்வரிசையில் பண்டிதர் கந்தையா என்றால் அனைத்து ஊர் மக்களும் அறிவர். பண்டிதர் பாரம்பரியத்தையும், சைவ சித்தாந்த பாரம்பரியத்தையும் தனதாக்கி, எல்லோருக்கும் வழிகாட்டியாக வாழ்ந்தவர். ஏழாலை - என்றால் கந்தையா, சித்தாந்தம் என்றால் கந்தையா என்ற தொனிப்பொருளைத் தனதாக்கி, திருக்கேதீஸ்வர மான்மியம் போன்ற பல நூல்களையும் ஆக்கி நூலினூடாக அனைவரையும் சிந்திக்கவைத்து அனைவருக்கும் பெருமை சேர்த்தவர். இன்று இவருடைய நூறாவது அகவையை நினைவு கூர்ந்து அனைவருடைய சிந்தனைகளையும் வெளிக்கொணர்வது பெருமைக்கு உரியதாகும். நினைவை வெளிக்கொணரும் அன்புள்ளங்களை வாழ்த்துகின்றோம். மு.கந்தையா அவர்களின் ஆத்மா இறையின்பம் பெற பிரார்த்திக்கின்றோம்.

என்றும் வேண்டும் மாறாத இன்ப அன்பு

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

# ஆசியுரை



ஞானத்தின் திருவுருவாய் அருள்பாலித்து நிற்கும் நகுலேஸ்வரப் பெருமானின் திருவடிகளை வணங்கி, ஏழாலை சைவச்செம்மல் பண்டிதமணி மு. கந்தையா அவர்களின் பிறந்த நுற்றாண்டு அகவைச் சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

...ந்த நெறியில் வாழ்ந்து காட்டியதுடன் சைவநெறி தழைக்கப் பல்துறைப் பணிகளைச் செய்து அமரத்துவமடைந்தவர். ஏழாலை மண்ணிலே தோன்றி அவர் செய்த நூலாக்கப் பணிகள் போற்றுதற்குரியவையே. அவை இன்றும் சைவ உலகில் சைவமணம் பரப்பிக்கொண்டுதான் இருக்கின்றன.

கீரிமலைச் சிவநெறிக்கழகத்தில் சைவ சித்தாந்தக் கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், வகுப்புக்கள் திறம்பட நடாத்தியதை நான் கண்டு மெச்சியுள்ளேன். விழாக் குழுவினரின் முயற்சியைப் பாராட்டுவதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு நல்லாசி கூறி, இறையருள் வேண்டி நிறைவு செய்கின்றேன்.

ராஜராஜஸ்ரீ. கு.நகுலேஸ்வரக் குருக்கள்,
ஆதீனகர்த்தா நகுலேஸ்வர தேவஸ்தானம்
கீரிமலை.

## தூய சைவநிலை மீட்கத் துணிந்தோம்

நித்தியநை மித்தியங்கள் இரண்டும் முன்னால்
நிகழ்ந்தகும்பா பிஷேகத்தின் ஆற்றல் நின்று
மெத்துவிற ஹுறமேலோர் வகைமை தேர்ந்து
விதித்தஉபா யங்கள்ஒன்றும் விளங்க லொட்டா
மத்தர்களால் நிலைமைவிப ரீதமாச்சு
மதிப்பான சைவமதிப் பிழைப்பாய்ப் போச்சு
சுத்தவெளிச் சோம்பர்கள்போ லிருக்க வோநாம்
தூயசைவ நிலைமீட்கத் துணிந்தோ மின்றே.

பரார்த்தபூ சைக்கென்று சைவா சார்யர்
பதம்பணிந்து பெற்றசிவா சார்ய தீக்ஷை
யதார்த்தத்தைக் காற்றினிலே பறக்க விட்டிங்
கேமாற்றுஞ் சங்கரசண் மதப்பொய் வாய்மைச்
சுமார்த்தலட் சியந்தமதா வரித்துப் பேணிச்
சொல்லியிறு மாப்படையுங் கண்ணி றாவிச்
சுமார்த்தநோ விசுக்களினாற் சிவநெ றிக்காம்
துரிசுகளை வாரெவரோ அவரே சைவர்.

(குறிப்பு : நோவிசு-Novice-கற்றுக்குட்டி) இலக்கியகலாநிதி மு. கந்தையா


நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

சிவமயம்

முத்தமிழ்க்குருமணி, சகலாகமசங்கிரகர்
சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீ கதிரமலைச்சிவன் தேவஸ்தானம்
சுன்னாகம்.

*Muththamil Kurumani Sakalakamasankirakar*
**Sivasiri N. Sarwesvarakurukkal**
**Sri Kathiramalai Sivan Devasthanam**
**Chunnakam.**

..........20..........



# "சைவத்தமிழ்க் கலாசாரத்தின் பிதாமகர்"

சிவவழிபாடும், தமிழ்ப் புலமையும், சைவாசாரசீலமும் நிறைந்த பண்பாளர்கள் உறையும் சுன்னாகம் ஏழாலைக் கிராமத்தில் அதிக காலமாக சைவத்தமிழ்க் கலாசாரத்தின் பிதாமகராக திகழ்ந்தவர் உயர்திரு. மு. கந்தையா பண்டிதர் ஐயா அவர்களாவார். அவரது வாழ்வு எல்லோருக்கும் முன் மாதிரியானது. தமிழில், வடமொழியில், ஆங்கிலத்தில், ஆழ்ந்த புலமையுடையவர்.

சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலய மண்டபத்தில் ஆறு வருடகாலங்களுக்கு மேலாக சைவசித்தாந்த வகுப்புக்களைப் பிரதிபலன் பாராது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் செய்து வந்தவர். இருபத்தைந்துக்கு மேற்பட்ட பண்டிதர்கள், ஆசிரியர்கள், தகைமையாளர்கள் மாணவர்களாகப் பயின்றார்கள். அவரது ஆழமான சிந்தனைகளை அப்போது பலபேருடன் நாமும் கண்டு உணர்ந்து வியந்தோம்.

திருக்கேதீஸ்வர புராணம் இயற்றியபோது சிவனைக் கேது பூசித்தமை பற்றி விபரிப்பதற்கு கந்தபுராணத்தில் இந்திரன் வழிபட்டமை, குமார தந்திரத்தில் முருகன் வழிபட்டமை, பற்றியெல்லாம் ஆராய்ந்து புகுத்திய பெருமைக்கு உரியவர். இதனை இலக்கணவித்தகர் நமசிவாய தேசிகர் போன்ற அறிஞர்கள் புகழ்ந்து போற்றினார்கள். எந்த இடத்திலும் எப்போது சந்தேகம் கேட்டாலும் ஒரு குனித்த புருவச் சிரிப்புடன் கண்ணை மூடி வெண்டலை கோதிவிட்டு அற்புதமான விளக்கங்களை ஏற்றவாறு கூறியதை யாவரும் வியந்து பாராட்டுவர்.

அவரது அனுபவமும், இறைபக்தியும், குருபக்தியும், தூய்மையான எளிய வாழ்வு முறையும் எல்லோருக்கும் சிறந்த வழிப்படுத்தும் சன்மார்க்கமாகும். இந்த நாளில் அவரது புகழ் பேசி அகவணக்கம் செய்தலே எமது நன்றிப்பாடாகும் எனக் கூறி அவரது அன்புக்கினியவனாக, மாணவனாகப் போற்றித் துதிசெய்து அவர் குடும்பத்திற்கும் விழாக்குழுவினருக்கும் நல்லாசிகளைத் தெரிவித்து இறைவன் பாதம் பணிகிறோம்.

சுபம்

சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

உ
சிவமயம்

# வாழ்த்துரை

சைவசித்தாந்த மேன்மையும் இலங்கையர் பங்களிப்பும் பற்றிச் சிந்திக்கும்பொழுது யாழ்ப்பாணம் ஏழாலையில் பிறந்து (1917) அம்மண்ணிலிருந்து சைவசித்தாந்த வளர்ச்சிக்கு அரும் பணியாற்றி அமரத்துவமடைந்த பண்டிதமணி இலக்கிய கலாநிதி மு. கந்தையா அவர்களது பங்கும் பணியும் அளப்பரியன. அப்பெரியாரது நூற்றாண்டு பிறந்த நாள் நிறைவினை நினைவு கூரும் முகமாக அவரது அன்பு நெஞ்சங்கள் சிறப்புமலர் வெளியிட முன்வந்துள்ளதையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றேன்.

பண்டிதர் மு. கந்தையா தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் புலமை மிக்கவராகத் திகழ்ந்தவர். நல்லாசானாகப் பல காலம் பணியாற்றிய அனுபவமிக்கவர். மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பட்டமும், வடமொழியில் இலண்டன் பல்கலைக்கழகத்து பி.ஏ. சிறப்புப் பட்டமும் பெற்றுத் தம் வாழ்நாளின் பெரும் பகுதியை சைவசித்தாந்தம் கற்பதற்கும், கற்பிப்பதற்கும் ஆய்வு செய்வதற்குமாக அர்ப்பணித்தவர். இவரது சைவசித்தாந்த புலமைத்துவத்தினை அறிஞர் உலகம் வெகுவாகப் பாராட்டியுள்ளமை குறிப்பிடற்பாலது. இவர் சைவசித்தாந்தம் தொடர்பான சிந்தனைத் திறன்மிக்க நூல்கள் பலவற்றை எழுதி வெளியிட்டு ஏனையோரும் சைவசித்தாந்த அறிவினைப் பெற்றுச் சிறக்க ஆற்றுப்படுத்திய பெருமைமிக்கவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாகிய அவரது "சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்ற நூல் சைவசித்தாந்த அறிவு விருத்திக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இவர் இலங்கை சாகித்திய மண்டலத்து நூற்பரிசும், சான்றோருக்கான உயர் பரிசும் பெற்றவர். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அழைப்பினை யேற்று சைவசித்தாந்த பொருள் பற்றி அவர்ஆற்றிய திருவாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை சைவசித்தாந்த ஆர்வலர்க்கு அரிய விருந்தாக அமைந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இவரது சைவ சித்தாந்த தமிழிலக்கியப் பணிகளைப் பாராட்டி **இலக்கியகலாநிதி** எனும் பட்டம் வழங்கிக் கௌரவித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

சிறந்த தமிழறிஞராகவும் சைவசித்தாந்த நல்லறிஞராகவும் விளங்கிய பண்டிதர் மு. கந்தையாவின் பிறந்தநாள் நூற்றாண்டுக்குப் பொருத்தமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறையினர் சென்ற ஏப்ரல் 2017 இல் நடத்திய இரண்டாவது அனைத்துலக சைவ மாநாடு **சைவசித்தாந்த மேன்மையும் இலங்கையர் பங்களிப்பும்** என்ற கருப்பொருளில் அமைந்தமை குறிப்பிடற்பாலது. இம்மாநாடு இத்தகைய நல்லறிஞர்களுக்கான கௌரவமாக அமைந்தது.

பண்டிதர் மு. கந்தையா அவர்களது சைவசித்தாந்தப் பணி இத்துறை சார்ந்த எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பெரும் வழிகாட்டியாகவும் முன்மாதிரியாகவும் அமைவதாகுக. நூற்றாண்டு விழாக் குழுவினரின் அப்பெரியாரைக் கௌரவிக்கும் இவ்வரியபணி சிறக்க எமது நல்வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக. ஈழத்துச் சைவசித்தாந்த வரலாற்றில் ஏழாலை பண்டிதர் மு. கந்தையா உன்னத இடத்தைப் பெறும் நல்லறிஞராவார்.

பேராசிரியர் இலக்கிய கலாநிதி
ப. கோபாலகிருஷ்ண ஐயர்.
வாழ்நாள் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
Sri Durgadevi Devasthanam
Tellippalai, Sri Lanka.
E.Mail:- Thurkaiammantemple@gmail.com
Face Book:- tellidurga@gmail.com
T.P No : 021 - 3213151
திகதி: 04 - 06 - 201
Fax:- 021 2241909
தலைவர்:
செஞ்சொற் செல்வர்
கலாநிதி. ஆறு திருமுருகன்
Dr.ARUTHIRUMURUGAN
E.Mail:- Aruthirumurugan@gmail.com Hot Line:- 0776258511

## சைவத் தமிழ்க்காவலன்



சிந்தனைக் களஞ்சியமாக எம்மத்தியில் விளங்கிய சைவசித்தாந்த வித்தகர் பண்டிதர் மு. கந்தையா ஐயா அவர்களின் நூற்றாண்டு நினைவு குறித்து சிறப்பு மலர் வெளியிடுவது அறிந்து ஆனந்தமடைகிறேன். ஏழாலைத் திருவூர் பெற்ற புண்ணியசீலர். சைவசமயத்தின் மீதும் தமிழ்மொழி மீதும் ஒப்பற்ற பக்தி கொண்டு செயற்பட்ட செயல்வீரர்.

நல்லைநகர் நாவலர் பெருமான் வழியில் சைவசமய மரபுக்கு இடையூறானவற்றைக் கண்டித்துப் பிரசுரம் வெளியிட்டவர். திருத்தொண்டர் புராணத்தை வாழ்நாள் முழுவதும் ஐயம் திரிபறக் கற்றுப் பிறர் பயன் பெறப் போதித்தவர்.

தருமபுர ஆதீனம் ஈழத்திலிருந்து தகைசால் அறிஞராக அழைத்துக் கௌரவித்த பெருமைக்குரியவர். ஆதீன வெளியீடான பன்னிரு திருமுறை வெளியீட்டுப் பணிக்கு உதவியவர். திருமுறைகள் பற்றிய ஐயங்களை போக்கும் ஆற்றலும் சைவசித்தாந்தம் தொடர்பான ஐயங்களை தெளிவுபடுத்தும் பேராற்றலும் நிறைந்த பெருமகன்.

வாழ்நாள் முழுவதும் சீரிய பணியாற்றிய சைவத்தமிழ்க் காவலனை நீள நினைந்து வணங்குவோம். அப்பெருமகனார் காட்டிய வழியில் எம் பணி தொடர்வோம்.

கலாநிதி. ஆறு. திருமுருகன்

**கலாநிதி.ஆறு.திருமுருகன்**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை.**

உ

சிவமயம்

# வாழ்த்துரை



இலக்கிய கலாநிதி, பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா அவர்களின் நூற்றாண்டு நினைவு விழாவுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

"சிவபூமி" என்று திருமூலரால் போற்றப்படும் இலங்கையிலே தொன்றுதொட்டு இன்றுவரை சித்தாந்த சைவப் பண்பாட்டுப் பாரம்பரியம் நன்கு வளர்த்தெடுக்கப்பட்டு வருவது நாம் செய்த தவப்பயனாகும்.

இந்த வழித்தடத்தில் இருபதாம் நூற்றாண்டில் இலங்கையில் சைவசித்தாந்தத்தை மேம்பாடு பெறச் செய்த சைவசித்தாந்த வித்தகராக இலக்கிய கலாநிதி மு. கந்தையா அவர்கள் விளங்கினார்.

அவர் ஒரு மும்மொழிப்புலமையாளராகத் திகழ்ந்தார். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதத்தொடங்கிய பெரியபுராண சூசனத்தின் பிற்பகுதிகளை முழுமையாக எழுதிமுடித்த பெருமைக்குரியவர். இவர் எழுதிய பிற நூல்களுள் சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி, சித்தாந்தச் செழும்புதையல்கள், திருக்கேதீஸ்வர மான்மியம் ஆகிய நூல்கள் இவரின் சைவ சித்தாந்தப் புலமையை நிறுவி நிற்கின்றன.

சைவசித்தாந்தப் பேரறிஞர் சிவஞான முனிவரின் கருத்தையே மதிப்புடன் மறுத்துரைக்கும் மாண்பு இவரிடம் இருந்தமை இவரின் சைவசித்தாந்த மதிநுட்பத்தைக் காட்டி நிற்கின்றது. சைவசித்தாந்தம் வெறும் தத்துவமன்று. அது ஒரு "சமயத்துவம்" என்பதே இவரின் நிலைப்பாடாகும்.

நாம் வாழும் காலத்தில் சித்தாந்த சைவவாழ்வு வாழ்ந்து காட்டிய இச் சைவப் பெரியாருக்கு அவரின் நினைவாக பிறந்தநாள் நூற்றாண்டு விழா எடுப்பது காலத்தின் கட்டாய தேவையாகவுள்ளது. இந்நூற்றாண்டு விழா சிறப்புற நடைபெறச் சிவனருளை வேண்டி இவ்விழாவினை எடுக்கும் அனைத்து அன்பர்களையும் வாழ்த்தி அமைகின்றேன்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்,
தலைவர், இந்துநாகரிகத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

# சைவசித்தாந்தியாக வாழ்ந்து காட்டிய பண்டிதர் ஐயா

- பேராசிரியர் இ. குமாரவடிவேல், முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி,
யாழ். பல்கலைக்கழகம்.



ஏழாலையூர் பண்டிதர் கலாநிதி மு. கந்தையா அவர்களது பிறந்தநாள் நூற்றாண்டு விழா இவ்வாண்டு அமைகிறது. யாழ்ப்பாணம் தந்த சைவப் பேரறிஞர்கள் வரிசையில் பண்டிதர் ஐயா அவர்களுக்கு முக்கிய இடமுண்டு.

சைவ ஒழுக்கமும் சைவசித்தாந்த உணர்ச்சியும் நிறைந் தவர் பண்டிதர் ஐயா அவர்கள். சித்தாந்த சாஸ்திரங்களிலும் திருமுறைகளிலும் முழுகித் திளைத்தவர் அவர். நாவலர் பெருமான் எழுத ஆரம்பித்து முடிவுறாதிருந்த பெரியபுராண சூசனத்தை எழுதி முடிக்கும் தகுதி பெற்றிருந்தவர்.

சைவசித்தாந்த நூலறிவு, ஆராய்ச்சித்திறன் ஆகியவற்றில் முதிர்ச்சி பெற்ற பெரும் புலமையாளனாக மட்டுமன்றி சைவசித்தாந்த உணர்வுடன் சைவசித்தாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட சமய வாழ்க்கையை முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர் பண்டிதர் ஐயா அவர்கள். அவர் தாம் ஆராய்ந்து அறிந்து உணர்ந்த உண்மைகளை பலவேறு இடங்களில் சித்தாந்த வகுப்புகளை நடாத்தி சாதனையுடன் போதனையிலும் ஈடுபட்டு சைவசித்தாந்த அறிவு வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியவர்.

பண்டிதர் ஐயாவின் வாழ்க்கை சைவசித்தாந்த வாழ்க்கைமுறைக்கு ஒரு உதாரணம். அவர் நூல்களாகக், கட்டுரைகளாக எழுத்தில் தந்தவை சைவசமயத்தவர்களுக்குக் கிடைத்தவொரு பொக்கிஷம். பண்டிதர் ஐயா அவர்கள் வாழ்ந்து காட்டியபடி உண்மைச் சைவசமயிகளாக வாழ முயற்சிப்பதும் அன்னார் எமக்கு வெளிச்சமிட்டுக் காட்டிய சைவாலய பூசைகள், கிரியைகள் பற்றிய சைவசித்தாந்த நோக்கிலான தத்துவங்களை அறிந்து உணர்ந்து கடைப்பிடிப்பதும் கடைப்பிடிக்க வைப்பதும் வேண்டற்பாலது.

## *மகரிஷி விவேகானந்தர் சொன்னார்*

இந்துஎன்ற பெயர்க்குப்பதில் எங்கள் சைவம்
சைவனென்றே சொல்கஎன யாழ்ப்பா ணத்தில்
வந்துசொன்னார் மகரிஷிவி வேகா னந்தர்
வரலாற்றுக் கண்கூட இருண்ட தாலே
அந்தமஹான் சொன்னதையுந் தலைகீ ழாக்கிச்
சைவனென்றால் இந்துவென்றே சொல்க என்னும்
மந்தமதி களும்நமரேல் எளியே முக்கு
வாழ்ச்சியெங்கே தலைகீழாம் வீழ்ச்சி தானே.

இலக்கியகலாநிதி மு. கந்தையா

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

உ

சிவமயம்

# அர்த்தமுள்ள நூற்றாண்டு

## 'வானவர்கள் வாழ்த்துவதும் தாம்வாழ்வான் வேண்டி'

- முருகேசு கௌரிகாந்தன், முதுநிலை விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி



ஏழாலை சித்தவைத்திய மூதறிஞர் ஐ. பேரம்பலம் (1889 - 1990) அவர்கள் அமரத்துவம் எய்தியபோது, எமது ஞானபண்டிதர் மு. கந்தையா (1917 - 2002) அவர்களால் எழுதப் பெற்ற 'அர்த்தமுள்ள ஒரு நூற்றாண்டு' எனும் கட்டுரைத் தலைப்பு பிற்காலத்தில் இலக்கிய கலாநிதியாகவும் உயர்ந்து சிவபதமடைந்த இப் பெரியார்க்கு இன்று மிகவும் பொருத்தமுடையதாகத் தெரிகின்றது. அவருக்கான செய்திக்கு அவரே அடியெடுத்துக் கொடுத்துள்ளார் என்பதுதான் உண்மை. செயற்கரிய செய்த இப் பெரியார் அமரத்துவம் எய்திப் பதினைந்து ஆண்டுகள் கழிந்துவிட்ட போதிலும் இவரின் முன்மாதிரியான வாழ்வு இல்லறக்கடலில் மூழ்கிப் போகாமல் சைவத்துக்கும் தமிழுக்கும் தம்மை அர்ப்பணித்து மேற்கொண்ட பணிகளும் இவரை 'நீள நினைக்க' வைக்கின்றன. வருங்கால சந்ததி அவரது படைப்புக்களில் இயலக் கூடியவற்றை ஆற அமர இருந்து படித்துப் பார்த்தால் நல்ல அகவளர்ச்சியினைப் பெறுவர் என்பது திண்ணம். பண்டிதர் அவர்களால் பல்வேறு காலங்களில் சராசரி மக்களுக்காகவும் எழுதப்பெற்ற பயன்மிக்க ஏராளமான கட்டுரைகள் இன்று பலரால் அறியப்படாமலேயே சஞ்சிகைகளிலும் மலர்களிலும் மறைவாக உள்ளன. அவற்றை இவரது இந்த நூற்றாண்டுக் காலத்தில் தொகுத்து வெளியிட்டு நூற்றாண்டை மேலும் அர்த்தப்படுத்துவோம்.

**சைவநீதி** *முத்திங்கள் இதழ் பெறுமதி விபரம்*

தனிப்பிரதி ரூபா 50.00. ஆண்டொன்றுக்கு ரூபா. 300.00

ஏனைய நாடுகளில் ஆண்டொன்றுக்கு

ஸ்ரேலிங் பவுண் £ 10 அல்லது

அமெரிக்க டொலர் US $ 15

**சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.**

***சந்தா அனுப்ப வேண்டிய முகவரி***

C. Navaneethakumar

No: 1/2, 'B' Block, Govt. Flats,

Hospital Road, Dehiwela. **Tel : 077 900 8286**

உ
சிவமயம்

# நாவலர் வழிவந்த சைவ சேனாதிபதி

சிவத்தமிழ் வித்தகர், கலாபூஷணம் சிவ. மகாலிங்கம்

சைவசித்தாந்த தத்துவ வளர்ச்சிக்குத் தமிழ் நாட்டவர்கள் வழங்கிய பங்களிப்பிலும் பார்க்க ஈழத்தவர்களின் பங்களிப்பு மிகவும் உயர்வானது. சுவாமி ஞானப்பிரகாசரால் ஆரம்பிக்கப் பெற்ற சைவ சித்தாந்த ஆய்வு முயற்சிகள் வித்துவான் மு. கந்தையா வரை பல அறிஞர்களால் தொடரப்பட்டன. இன்றும் சிலர் இவ் ஆய்வு முயற்சிகளில் மிகவும் அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார்கள்.

ஏழாலைக் கிராமம் சைவமும் தமிழும் வளர்த்த சிவபூமி. பக்தர்கள், ஞானிகள், யோகிகள், சித்தர்கள் எனப் பலரும் வாழையடி வாழையாக வாழ்ந்த புண்ணிய பூமி. ஏழாலை மேற்கு மடத்துப் பிள்ளையார் கோயில் சூழல் தெய்வீக மணம் கமழும் பிரதேசம். அந்தச் சூழலில் ஆன்மிக எழுச்சி அலை இன்றும் வீசிக்கொண்டே இருக்கிறது. சடைவரத சுவாமிகளின் அருட்பார்வைக்கு உட்பட்ட பலர் இங்கே வாழ்ந்து வந்தார்கள். இவர்களில் பண்டிதர் மு. கந்தையா அவர்களும் ஒருவராக இருந்தார்.

ஏழாலை மேற்கில் வாழ்ந்த முத்தர் அன்னப்பிள்ளை தம்பதிகள் செய்த தவத்தின் பயனாக 19.06.1917இல் ஞான சூரியனாக வித்துவான் கந்தையா அவர்கள் தோன்றினார். தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பாண்டித்தியம் மிக்க பண்டிதர் அவர்கள் தெய்வத் தமிழாகிய பன்னிரு திருமுறைகளிலும், ஞானப் பொக்கிஷங்களாகிய மெய்கண்ட சாஸ்திர நூல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்.

இவர் சைவசித்தாந்தக் கருத்துக்களை விளக்கிப் பல நூல்களை எழுதியுள்ளார். சித்தாந்தச் செழும் புதையல்கள், சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், சிவஞான சித்தி திறவுகோல், சைவசித்தாந்தத்தில் மாயை உண்மை, சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி என்பன இவர் எழுதிய நூல்களில் சைவசித்தாந்தம் சார்ந்தவை ஆகும். மகா ஞானியாகிய அளவெட்டி பொ. கைலாசபதியின் சிந்தனைகளை விரிவாக விளக்கி இவர் எழுதிய கைலாசபதி ஸ்மிருதி என்ற ஆய்வு நூல் இவர் எழுதிய நூல்களில் மகாமேரு மலைபோல உயர்ந்து காணப்படுகிறது. நாவலர் பெருமானின் பெரியபுராண சூசனத்தைப் பூர்த்தி செய்த பெருமையும் இவரையே சாரும்.

மனதிலே பட்டதைத் துணிந்து வெளியிலே சொல்லும் ஆற்றல் படைத்தவர். சைவசமய நெறிக்கு மாறாகச் செயற்படுபவர்கள் யாராக இருந்தாலும், எத்தகைய பதவிகளில் இருந்தாலும், எத்தகைய பின்புலத்தைக் கொண்டிருந்தாலும் அவர்களை எதிர்த்து துணிந்து குரல் எழுப்பியவர். பணத்திற்காகவும் பதவிகளுக்காகவும் விலை போகாதவர். விளம்பர வித்தைகளுக்குள் அகப்படாதவர். நாவலருக்குப் பின்பு நமது நாட்டில் சைவத்தை பாதுகாக்க முற்பட்டவர்களில் முதன்மையானவர், சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்காக மிளிர்ந்தவர்; பண்டிதர் மு.கந்தையா அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நினைவு தினத்தில் அவருடைய சிந்தனைகளுக்குச் செயல் வடிவம் கொடுக்க நாம் அனைவரும் இணைந்து செயற்படுவோமாக.

உ
சிவமயம்

# சைவ சித்தாந்த அறிஞர் இலக்கியகலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்களுக்கு இன்று நூற்றாண்டு நிறைவு.

- சைவத்திரு. கா. சிவபாலன்.
மட்டுவில்.

வலிகாமம் வடக்குப் பிரதேசத்தில் ஏழாலைக் கிராமம் சைவ ஆலயங்களாலும் சித்தாந்த அறிஞர் பெருமக்களாலும், பெருமை பெற்றது. சைவசித்தாந்த அறிஞரான இலக்கியகலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்கள் ஏழாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். 19.06.1917ஆம் ஆண்டு திரு. முத்தர் தம்பதிகளின் புண்ணிய தவத்தின் பெறு பேறாகப் பிறந்தவர்.

இவர் ஏழாலையில் ஆரம்பக்கல்வியைப் பெற்றார். உயர் கல்வியைக் கற்று B.A. பட்டம் பெற்றார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், பாளி போன்ற மொழிகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவர். எங்கள் சமய குரவர்களில் சரியை வழிபாட்டு நெறி நின்ற திருநாவுக்கரசு சுவாமிகளில் மிகுந்த பற்றுக் கொண்டவர். இவர் மீது கொண்ட ஈடுபாடு காரணமாக அப்பர் சுவாமிகள் வழிபாடு இயற்றிய திருத்தலமான "சக்திமுற்றம்" எனும் தலத்தின் பெயரையே தமது இல்லத்துக்கும் வைத்து வரலாயினார்.

தமிழ் இலக்கிய இலக்கணத்தை வித்துவசிரோமணி கணேசையரிடமும், சைவ சித்தாந்த அறிவை பேரறிஞர் அருளானந்தசிவம் அவர்களிடமும் ஐயந்திரிபறக் கற்றுக் கொண்டார்கள். இதனாலேயே பல சைவ நிறுவனங்கள் தோறும் சென்று மாணவர்களுக்கு சைவசித்தாந்த வகுப்பு நடாத்தி பெருமை பெற்றார்.

இவர் நம் நாட்டில் உள்ள பிரபல ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் போன்றவற்றுடன் தொடர்பும், ஈடுபாடும் கொண்டவர்.

இன்று சர்வதேச அரங்கில் முன்னணியாக உள்ள தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவில் வரலாற்றை 1965ஆம் ஆண்டு பௌராணிகவித்தகர் வ. குகசர்மா, சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன் கூட்டாக சேர்ந்து எழுதினார். மீண்டும் கடந்த 1984ஆம் ஆண்டு **"SRI DURGADEVI TEMPLE"** என்ற ஆங்கில நூலை எழுதியிருந்தார். அந்நூல் பேராசிரியர் சு. வித்தியானந்தன் அவர்களின் முன்னுரையுடன் சென்னை வெளியீட்டுக் கழகத்தினரால் வெளியிடப்பட்டது.

சிவத்தமிழ்செல்வி அம்மையார் பண்டிதர் ஐயாவின் அருமை பெருமைகளை நன்குணந்தவர். இதனால் இவருடைய அரியவும் பெரியவும் (பாகம் 1) ஐ 1984 இலும், அரியவும் பெரியவும் (பாகம் 2) ஐ 1987 இலும் தேவஸ்தான வெளியீடாக வெளியிட்டு தேவஸ்தானம் பெருமைபெற்றது.

மாவை முருகன் பிள்ளைத்தமிழ், குழந்தைவேல் சுவாமிகளும் குருபரம்பரையும், சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள், சித்தாந்த செழும் புதையல்கள், நாவலர் பிள்ளைத் தமிழ், சிவாலயபூசையிற் தமிழ் வேதம், சிவாலய சேவை ஏன்? எப்படி?, அபரக்கிரியை விளக்கம்,

வைரவ வழிபாடு, திருக்கேதீஸ்வர மான்மியம், ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை பிள்ளைத்தமிழ், சிவஞானசித்தித் திறவுகோல், திருக்குறிப்புத் தொண்டர் புராண ஆறுமுகத் தம்பிரான் உரை போன்ற பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுக்கெல்லாம் உரை விளக்கம் செய்தும் சைவத்துக்கும் தமிழுக்கும் அரும் பெரும் தொண்டாற்றிய பெருமகனார் எனில் மிகையொன்றும் இல்லை. நம் ஈழத்திருநாட்டிலும் மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாட்டிலும் வாழ்ந்துவரும் அறிஞர்கள் மத்தியில் ஒரு தனியான இடம் பதித்தவர்.

தமிழ் மூதறிஞர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்று பண்டிதர் மு. கந்தையா அவர்களும் நாவலர் பெருமான் மீது அபார பக்தியும் பித்துப்பிடித்தவராகவும் விளங்கிய பெருமகனாவார். நல்லூரில் இருந்த நாவலர் பெருமானின் சிலைக்கு தீங்கு இழைக்கப்பட்ட போது மனம் உடைந்து மனக்கொதிப்புடன் காணப்பட்டார். இவ்வேளையில் நாவலர் பெருமானின் அருமை பெருமைகளை நவீன, கலியுக உலகுக்கு வெளிக்காட்ட "நாவலர் குரல்" என்ற பத்திரிகையை வெளியிட்டார். அப்பத்திரிகையில் கௌரவ ஆசிரியராக இருந்து அரிய தொண்டு ஆற்றினார். 1990, 1992 ஆண்டுகளில் அவரின் நூல்களுக்காக இலங்கை அரசின் சாகித்திய மண்டல உயர் விருதைப் பெற்றார். அகில இலங்கை கம்பன் கழகத்தினரால் கௌரவிக்கப் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ இலக்கியகலாநிதி பட்டம் வழங்கி பெருமை பெற்றது.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களாலும் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாராலும் போற்றிப் புகழ்ந்த சைவசித்தாந்த அறிஞர் இலக்கியகலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்களை ஏகாந்த நிலையில் நூற்றாண்டு நினைவைக் கொண்டாடுவோமாக.

### இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. க. வின் திருக்கேதீச்சர மான்மியம் பொற்பொளிர்காண்டம் என்னும் நூற் பகுதிக்கு இலக்கணவித்தகர் இ. நமசிவாயதேசிகர் வழங்கிய அணிந்துரையிலிருந்து

இந்நூலாசிரியர் இளமைப் பருவத்திலிருந்தே கற்பனவற்றை விரையாது அமைதியாக விளங்கிக் கற்குமியல்பும் நுண்மதியும் கற்றடங்கியவருடனேயே பழகுதலும் புராணபடனத் தொடர்பும் உடையவர். தமிழ்க் கல்வியோடமையாது வடமொழியும் ஆங்கிலமும் கற்றவர். தமிழிலக்கண இலக்கிய தருக்க பாண்டித்தியம் பெற்றதோடமையாது அது கருவியாகச் சைவத் திருமுறைகள் மெய்கண்ட சாத்திரங்கள் பிற அருளாளர் நூல்கள் என்பவற்றிலும் மிகுந்த பயிற்சி பெற்றவர். வடமொழி அறிவினால் வேதம், ஆகமம், உபநிடதம், புராணம், இதிகாசம், பலவித கலைகள் என்பவற்றிலும் அறிவு பெற்றவர். இவற்றின் பயனாக அரிய பெரிய வசன நூல்களும் பிரபந்தங்களுஞ் செய்தவர். உலகியலையும் நுண்ணிதின் நோக்கி உண்மை காணும் இயல்பு வாய்ந்தவர். இன்னோரன்ன தகுதிப்பாடுகளுள்ள இவருக்குப் பலதுறையினுஞ் சென்ற நுண்ணறிவாளராலேயே செய்யத்தக்க இந் நூலாக்கத்திற் சரித்திரங்கள், இலக்கியங்கள், கர்ண பரம்பரைக் கதைகள், கல்வெட்டுக்கள், புதைபொருளாராய்ச்சி முடிபுகள், கற்பனைத்திறன் ஆதியன துணை நிற்கின்றன.

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

உ
சிவமயம்

# கைலாசபதி ஸ்மிருதி பற்றிய சைவசித்தாந்த நோக்கு

சைவப்புலவர் சித்தாந்தரத்தினம் சா. பொன்னுத்துரை

இலக்கியகலாநிதி, பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா அவர்களின் சைவசித்தாந்தப் பணியில் இது ஒரு மைல் கல்லாகும்.

இவர் சைவத்தையும் அதன் தத்துவங்களையும் பேணி வளர்ப்பதில் தனது வாழ்நாளைக் கழித்த பெருமகனார். சைவசித்தாந்த நூற்கருத்துக்களை, வேதாகம நூற்கருத்துக்கான ஆதாரமாகக் காட்டி விளக்குவது இவரின் தனித்திறமை. சைவசித்தாந்தப் பாற்கடலிலிருந்து இவர் அள்ளித்தந்தவை ஏராளம். உரையாசிரியர்களாலும், பிற அறிஞர்களாலும் விளக்கமுடியாத சித்தாந்த முடிவுகள் பலவற்றைத் தெளிவாக விளக்கிய பெருமை இவருக்கு உண்டு. சிவப்பணிக்குத் தன்னை அர்ப்பணித்தவர். இவர் ஒரு மும்மொழிப் புலவர்.(தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம்) சைவசித்தாந்த வித்தகர். சைவசித்தாந்த மேம்பாட்டிற்கு இவர் பல ஆக்கங்களைத் தந்துள்ளார். ஐம்பதுக்கு மேற்பட்ட நூல்களும், முந்நூறுக்கு மேற்பட்ட கட்டுரைகளும். பல கவிதை நூல்களும், கண்டனங்களும் இவரது ஆக்கங்களில் உயரிய வகிபாகம் வகிப்பன. வாழ்நாள் கல்விக்கு உரமூட்டியதோடு சைவப்பழமாகவே வாழ்ந்து காட்டியவர்.

மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகளை, அழிவிலிருந்து பாதுகாக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பகீரதப்பிரயத்தனம் செய்தது. பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்கள் எழுதிய "பொ. கைலாசபதியின் சிந்தனைகள்" என்ற நூலின் சிந்தனைகளைத் தெளிவுபடுத்தி விளக்கமான நூல் ஒன்றை உருவாக்கம் செய்யவேண்டிய தேவைப்பாட்டை உணர்ந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், பண்டிதர் ஏழாலை மு.கந்தையா அவர்களையே பொருத்தமானவர் என இனங்கண்டுகொண்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட அரங்கில், (Faculty Forum) வெளியிடப்பட்ட திரு. ச. பரநிருபசிங்கம் அவர்களின் 'பொ. கைலாசபதி அவர்களும் பொருளாராய்ச்சியும்', பண்டிதமணி அவர்களின் 'பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைகள்' என்ற இரு நூல்களையும் பண்டிதர் அவர்களிடத்தில் கையளித்து, அவர்மூலம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்ட நூல், "சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி" என்பதாகும். மேற்படி இருநூல்களையும் ஆராய்ந்து எழுதிய கருவூலமான இந்நூல், பாற்கடலைக் கடைந்தெடுத்த சைவசித்தாந்தச் சிந்தனைத் தெளிவு எனப் போற்றத்தக்கது. இந்நூலின் மேன்மை கருதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மு. கந்தையா அவர்களுக்கு இலக்கியகலாநிதி பட்டம் அளித்துக் கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

"கைலாசபதி ஸ்மிருதி, ஈழமென்ன தென்னகமென்ன, பாரதமே காணாத பாரிய சிந்தனைக் கருவூலமாகக் காணப்படுகின்றது...... சைவ வேதாந்த சித்தாந்தப் பொருளம்சங்கள், கைலாசபதி சிந்தனைகள் என்னும் தொகுப்பு நூல் முழுவதிலும் காணக்கிடைக்கின்றன." என்று தனது நூல் முடிவுரையில், பண்டிதர் குறிப்பிட்டு வியக்கிறார். ஸ்மிருதி - ஸ்ம்ரு - நினை என்னும் அடியைக் கொண்டு, நினைவு என்றும், நினைத்தல் என்றும் பொருள்படும். சிந்தனை என்றும் எடுத்துக்கொள்ளலாம். பொ. கைலாசபதி பற்றிய சிந்தனைகளில் ஏழாலை மு. கந்தையா அவர்கள் தனது ஆழமான பார்வையைச் செலுத்தியிருக்கிறார்.

உ
சிவமயம்

# இலக்கியகலாநிதி, பண்டிதமணி ஏழாலை மு. கந்தையா B.A. அவர்களின் வாழ்க்கை வளம்

**(19.06.1917 - 10.07.2002)**



*''புலவர் பாடும் புகழுடையோர் நிரலில் தன்னிகரிலாத் தலைமகனாகத் திகழ்பவர் நல்லை நகர் நாவலர் பெருமான். அருமருந்தனையஅவர்தம் குணநல மாண்புகள் காலச் சுழலிற் கரந்து விடாமல் மக்கள் நினைவில் நீடுநின்று நிலைக்க வேண்டியவை. அவரவர் நினைவரங்குதோறும் படியெடுக்கப்பட்டுப் பலகாற் பயிலப்பெறுதலின் மூலம் உணர்வோடுணர்வாய்ச் செறிந்து கொள்ள வேண்டியவை. இத்தகைய எண்ணங்கள் அவர் பேரிற் செய்யுள் செய்யும் பணியை இன்றியமையாததாய் ஆக்கிவிட்டன.''*

என்பது இலக்கியகலாநிதி பண்டிதமணி அமரர் மு. கந்தையா அவர்கள் தாம் செய்த நாவலர் பிள்ளைத் தமிழ் என்னும் நூலின் முகவுரையிற் குறிப்பிட்டுள்ள சிந்தனை. இந்த வார்த்தைகள், இப்பகுதி குறிப்பிடும் பொருள் என்பன பண்டிதரையா அவர்களுக்கும் பொருத்தமானவைதானே! அவர்களும் புலவர் பாடும் புகழுடையவர்கள்தானே. அறிஞர்கள், புலவர்கள், சான்றோர்கள் சிந்தனையில் இக்கருத்து நியாயிக்கப்படுவதாக.

தமிழறிஞர்களான சி. வை. தாமோதரம்பிள்ளை, இலங்கையர்கோன், நட்டுவச்சுப்பையனார் முதலியோரும், சைவசித்தாந்தச்சுடர் அருளானந்தசிவம், சைவப்பெரியார் மு. ஞானப்பிரகாசம், ஆத்மஜோதி முத்தையா என்போரும், கணிதப் பேராசிரியர் கனகசபாபதி, உபவேந்தர் குணரத்தினம், சித்தமருத்துவத்துறைப் பேரறிஞர் ஐ. பொன்னையா, (பின்னர் அருளானந்தசிவம்) பேரம்பலம் என்போரும் தோன்றி வாழ்ந்த ஏழாலைப் பதியை இடமாகக் கொண்டவர்தான் எங்கள் பண்டிதரையா அவர்கள்.

ஏழு ஆலயங்களின் அருளாட்சியுடன் வளங்கொளித்த ஏழாலையின் மேற்குப் பகுதியில் சைவத் தமிழ் ஈடுபாடும் ஆசார சீலமும் நிரம்பிய முத்தர் அன்னப்பிள்ளை தம்பதியரின் அருந்தவப் புதல்வராக 1917.06.19 ஆந் தேதி பிறந்தவர் எங்கள் ஐயா அவர்கள். உயர் தமிழ் ஆற்றலும் சைவஞானத் தெளிவுமுடைய பெற்றோருக்குப் புத்திரராகத் தோன்றிய அமரர் பண்டிதரையா அவர்கள் கல்வியை அங்கிருந்த சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் நிறைவு செய்து கொண்டார்கள். உயர்தரக் கல்வியை அயற் கிராமங்களுக்குச் சென்று கற்க வேண்டியநிலை அன்றிருந்தது. போக்குவரவு வசதிக் குறைவினால் சில வாரங்களுள் அக் கல்விக்குத் தடை நேர்ந்தது. பின்னர் சுயமாகவே கற்றார்கள். சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் தேர்ச்சியும் பெற்றார்கள். தொடர்ந்து மஹா வித்துவான் சிவஸ்ரீ சி. கணேசையரிடம் பயின்று தமிழ் இலக்கண இலக்கிய ஆற்றலை வளர்த்துக் கொண்டார்கள். சைவ சித்தாந்தப் பேரொளி அருளானந்தசிவத்துடனாகிச் சைவசித்தாந்த அறிவை விருத்தி செய்து கொண்டார்கள். சுயமாகவே சமஸ்கிருத மொழி ஆற்றலையும் ஆங்கில மொழி ஆற்றலையும் வளர்த்துக் கொண்டார்கள்.

ஆசிரியத் தேர்வு பெற்ற அமரர் அவர்கள் 1938இல் ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையில் ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினார்கள். அந்த வேளை தமிழ் டிப்ளோமாவிற்குத் தேர்வு பெற்று இரண்டு வருடப் பல்கலைக்கழக வாழ்வனுபவத்துடன் சான்றிதழும் பெற்றார்கள். 1952இல் நாவலப்பிட்டிக் கதிரேசன் கல்லூரியில் பணிபுரியத் தொடங்கியதிலிருந்து மீண்டும் பல்கலைக் கழகச் சூழலை அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றார். அந்தத் தொடர்பைப் பயன் கொண்டு பட்டப் படிப்பிற்கான இடைநிலைத் தேர்வை நிறைவு செய்து கொண்டார்கள். 1958இல் இடம் பெற்ற அரசியற் குழப்பநிலை காரணமாக இடமாற்றம் பெற்று 1959இல் மானிப்பாய் இந்துக் கல்லூரியிற் சேவையைத் தொடர்ந்தார். ஓய்வு பெறும் வரை அங்கேயே பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் காலத்திலேதான் B.A. (சிறப்பு - சமஸ்கிருதம்) இலண்டன் பரீட்சைக்குத் தோற்றி வெற்றியுங் கண்டார். 1943இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டித பரீட்சைக்குத் தோற்றித் தேர்ச்சி பெற்றவர் என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

1945 இல் ஞானலட்சுமி என்னும் மாதரசியைத் தம் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்ட ஐயா அவர்கள், சுசீலாதேவி, சத்தியபாமா எனும் இரு பெண்பிள்ளைகளைப் பெற்று மணம்முடித்துக் கொடுத்து மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் ஏழாலை மேற்கில் **சத்திமுற்றம்** என்னும் பெயருடைய இல்லத்தில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

யாழ்ப்பாணத்திற் பணி புரியத் தொடங்கிய காலத்திருந்து இறுதி வரை ஐயா அவர்கள் எந்த வித உதவியும் பெறாது பிரத்தியேக அமைப்புகள் நடத்திய வகுப்புக்களில் கல்விப் பயிற்சி அளித்துள்ளார்கள். மானிப்பாய் இந்து சமய அபிவிருத்திச் சங்கம், நல்லை ஆதீனம், மல்லாகம் பண்டிதமாணவர் கழகம், நாவலர் மணி மண்டபம், சிவதொண்டன் நிலையம், அளவெட்டி சுப்பிரமுனிய சிவாச்சிரமம், கிளிநொச்சி ஆதாரக் கல்விக் குருகுலம், கீரிமலை சிவநெறிக்கழகம், நாவலர் ஆச்சிரமம், ஆ.தி.பா. சங்கம் என்பன அவற்றுட் சில. இந்த வகுப்புக்களில் சைவசித்தாந்த போதனையே மிகுதியும் இடம் பெற்றுளது. தமிழிலக்கணம், இலக்கியம், சமஸ்கிருதம் என்பவற்றையும் கற்பித்துள்ளார்.

இவ்வாறான கற்பித்தற் போக்கு புத்தம் புதுக் கோலங்களுடனான நூல்கள் தோன்றுவதற்குக் காரணமாகியது. சைவ சமயத்துடனான நூல்களே அதிகமாயின. சில தமிழ் மொழியுடனான நூல்களையும் பெற முடிந்தது. ஒவ்வொன்றும் மிகத் தெளிந்த அறிவைப் புகட்டுவனவாக உள்ளன.

## கௌரவப் பட்டங்கள்

***சைவசித்தாந்தப் பேரறிஞர்***

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயப் பவள விழாவில் (1995) சைவப் பெரியார் ஞானப்பிரகாசம் அவர்களால் வழங்கப் பெற்றது.

***பண்டிதமணி***

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச்சங்கத் தமிழ் விழாவில் (1998.3.7) வழங்கப் பெற்றது.

***இலக்கிய கலாநிதி***

யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் (1998.10.04) வழங்கப் பெற்றது.

***மகாமகோ உபாத்தியாயர்***

ஏழாலை மக்களால் நடத்தப்பட்ட பாராட்டுப் பெருவிழாவில் (1999) வழங்கப் பெற்றது.

# கௌரவ விருதுகள்

**சித்தாந்தச் செழும்புதையல், சித்தாந்த விளக்கில் சைவக்கிரியைகள்** எனும் இரு நூல்களும் இந்து சமய கலாசார அமைச்சின் பரிசு பெற்றுள்ளன.

**நாவலர் பிள்ளைத் தமிழ், சிவஞான சித்தித் திறவுகோல்** எனும் இரு நூல்களும் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றுள்ளன.

**திருக்கேதீஸ்வர மான்மியம் - புராதனகாண்டம்** - வடக்கு கிழக்கு மாகாண சபையின் சாகித்தியப் பரிசு பெற்றுள்ளது.

**திருக்கேதீஸ்வர மான்மியம் - பொற்பொளிர் காண்டம்** - இலக்கிய கலாநிதி பண்டிதமணி நினைவுப் பரிசும், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பிறந்தநாள் நிதியப் பரிசும் பெற்றுள்ளது.

# நூல் ஆக்கங்கள்

1. **குழந்தைவேல் சுவாமிகளும் குருபரம்பரையும்**
   கீரிமலை குழந்தைவேல் சுவாமிகள் சமாதிப் பரிபாலனசபை வெளியீடு -1965
2. **மாவைப் பிள்ளைத் தமிழ்.**
   மாவிட்டபுரம் முத்தமிழ்க் கலை மன்ற வெளியீடு - 1967
3. **சேக்கிழார் நாயனார் புராண ஆறுமுகத்தம்பிரான் உரை விளக்கம்**
   யாழ். தமிழ் நூற் பதிப்புக் கழக வெளியீடு - 1967
4. **தேர் மகத்துவம்**
   இணுவில் கிழக்கு பொ. கனகலிங்கம் நினைவு வெளியீடு - 1976
5. **நாவலர் பிள்ளைத் தமிழ்**
   காரைநகர்த் தமிழ்ச் சங்க வெளியீடு - 1978
6. **சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்**
   மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்க வெளியீடு - 1978
7. **சித்தாந்தச் செழும் புதையல்கள்**
   ஈழத்துச் சித்தாந்த சைவ வித்தியாபீட வெளியீடு - 1978
8. **சிவாலய பூசையில் தமிழ் வேதம்**
   ஏழாலைச் சைவப் பேரவை வெளியீடு - 1978
9. **சிவாலய சேவை ஏன்? எப்படி?**
   ஏழாலைச் சைவப் பேரவை வெளியீடு - 1978
10. **அரியவும் பெரியவும் - முதலாம் பாகம்**
    துர்க்கா தேவி தேவஸ்தான வெளியீடு - 1984
11. **அபரக்கிரியை விளக்கம் - வினாவிடை**
    இணுவில் கிழக்கு தங்கச்சியம்மா நினைவு வெளியீடு - 1985
12. **அரியவும் பெரியவும் - இரண்டாம் பாகம்**
    துர்க்கா தேவி தேவஸ்தான வெளியீடு - 1986
13. **சைவ சித்தாந்தத்தில் மாயை**
    இரண்டாம் அனைத்துலக சைவ சித்தாந்தக் கருத்தரங்கு
    மலேசியா வெளியீடு - 1986

**14. மரணத்தின் பின் அல்லது போகுமாறெங்ஙனே வருமாறேதோ?**
இணுவில் கிழக்கு தங்கச்சியம்மா நினைவு வெளியீடு - 1986

**15. வயிரவ வழிபாடு**
மயிலங்கூடல் ச. ஆறுமுகம் நினைவு வெளியீடு 1987

**16. சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரியம்மை பிள்ளைத்தமிழ்**
மேற்படி ஆலய பரிபாலன சபை வெளியீடு - 1987

**17. ஏழாலை கருணாகரப் பிள்ளையார் திருப்பள்ளியெழுச்சி**
மகாத்மா அச்சக வெளியீடு - 1988

**18. வல்லிபுர மாயவன் பிள்ளைத் தமிழ்**
சிங்கைநகர் ஆழ்கடலான் வெளியீடு - 1989

**19. திருக்கேதீஸ்வர மான்மியம் - புராதன காண்டம்**
திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு - 1989

**20. சிவஞான சித்தித் திறவுகோல்**
கொழும்புச் சிவத்திரு மன்ற வெளியீடு

**21. திருக்கேதீஸ்வர மான்மியம் - பொற்பொளிர் காண்டம்**
திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு - 1992

**22. திருத்தொண்டர் புராண சூசனம்**
மலேசியா - கோலாலம்பூர் சைவ சித்தாந்த நிலைய வெளியீடு - 1993

**23. திருக்கேதீஸ்வர மான்மியம் - கரந்துறை காண்டம்**
திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு

**24. திருக்கேதீஸ்வர மான்மியம் - நவோதய காண்டம்**
தமிழ்நாடு காந்தளக அச்சில் உள்ளது.

**25. சைவ சித்தாந்த அறிவு விருத்தியில் யாழ் மேதைகளின் சுவடுகள்**
லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை வெளியீடு - 1994

**26. ஆலயந் தொழுவது ஏன்? எப்படி?**
வயாவிளான் செ. உலகநாதன் நினைவு வெளியீடு - 1995

**27. சைவசித்தாந்த நோக்கில் கைலாசபதி ஸ்மிருதி**
யாழ். பல்கலைக் கழக வெளியீடு - 1998

**28. திருக்குறிப்புத் தொண்டர் புராணம்**
ஆறுமுகத்தம்பிரான் உரை விளக்கக் குறிப்பு யாழ் கூட்டுறவுப் பதிப்பக வெளியீடு.

**29. திருக்குறள் ஒழிபியல் பரிமேலழகர் உரை விளக்கக் குறிப்பு**
பண்டிதர் மு. க. நூல் வெளியீட்டுக் கழகம் - 2001

**30. ஒல்லுடை ஞானவயிரவர் போற்றித் திருவகவல்**
மேற்படி ஆலய பரிபாலன சபை - 1987

**31.** *THE TEMPLE OF DURGADEVI AT TELLIPALAI*
டெல்கி - சற்குரு பதிப்பக வெளியீடு

**32. திருக்கேதீஸ்வர மான்மியம் - நித்திய நைமித்திய காண்டம்**
திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபை வெளியீடு

**33. மாவைப் பள்ளு**
அச்சேறவில்லை

**34. நல்லை நாவலன் கோவை**
அச்சேறவில்லை

**35. 2ஆம் 4ஆம் சைவத் திருமுறை உரைகள்**
தருமையாதீன வேண்டுகோளின்படி செப்பம் செய்து கொடுத்துள்ளார்.

**36. அரியவும் பெரியவும் - மூன்றாம் பாகம்**
பண்டிதர் மு. க. நூல் வெளியீட்டுக் கழக வெளியீடு

**37. திருஞானசம்பந்தர் வினாவுரைப் பதிகங்கள்** - சித்தாந்த ஞானக்கருத்து விளக்கம்.
நூறாண்டு அகவை நிறைவு நினைவுவெளியீடு - 2017

**38. சனாதன சைவ விளக்கம்**
கொழும்புச் சிவத்திரு மன்ற வெளியீடு

**39. சைவ ஞானவிளக்கம்**
கொழும்புச் சிவத்திரு மன்ற வெளியீடு

## பண்டிதமணி மு. க. பற்றிய நூல்கள்

**1. சித்தாந்த ஞானக்களஞ்சியம்** - முதலாவது ஆண்டு வெளியீடு
நூல் வெளியீட்டுக்கழக வெளியீடு - 2003

**2. தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு. கந்தையா**
கலாநிதி க. கணேசலிங்கம் வெளியீடு

**3. சைவநீதி சிறப்புமலர்** - (பண்டிதரின் நூறாண்டு அகவை நிறைவு விழா நினைவு)
திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சிமையம் கொழும்பு. 2017

**4. சைவசித்தாந்தம் சிறப்புமலர்** - (பண்டிதரின் நூறாண்டு அகவை நிறைவு விழா நினைவு)
ஏழாலை சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம் - 2017

சைவப்புலவர் சு. செல்லத்துரை
செயலாளர்
இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா B.A.
நூல் வெளியீட்டுக் கழகம்.

### *இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. க. வின்*
### திருக்குறள் ஒழிபியல் – பரிமேலழகர் உரைவிளக்கம் என்னும் நூலுக்கு
### *இலக்கண வித்தகர் இ. நமசிவாயதேசிகர் வழங்கிய மதிப்புரையிலிருந்து*

மெய்யறிஞரின் பொருளிறுகிய கருத்துரைகளைப் பொருள் சிதையாது நெகிழ்த்துரைத்தலின் அருமை, கருவி நூல்களுக்கு மாறுபடாதுரைத்தல், முன்னைப் பொருள் நூல்களுக்குப் பொருந்த உரைத்தல், நூலுள்ளும் முன்பின் முரணாதுரைத்தல், அதிகாரத்துக்குப் பொருந்த உரைத்தல் முதலான சாதனங்களால் பரிமேலழகர் உரை நிரம்பக் கற்றோரிடத்துக் கேட்டன்றி அறிய முடியாத செய்யுள் போன்ற இறுக்கமான இயல்புடையதாகும்....... உரைகாண்டற்பயிற்சியும் பெற்றவரான ஏழாலையூர் ...... மு. கந்தையா அவர்கள் ஒழிபியல்...... பரிமேலழகர் உரைக்கோர் விளக்கம் எழுதியுள்ளார்கள். ஆசிரியர் ...... பரிமேலழகர் உரை முழுவதற்கும் இங்ஙனம் ஓர் விளக்கவுரை எழுதினால் உலகம் மகிழும்.

நன்றி சித்தாந்தஞானக்களஞ்சியம்

உ
சிவமயம்

# பண்டிதர் ஐயாவின் தடங்கள்

சைவப்புலவர் ஏ. அநுசாந்தன், திருவாவடுதுறை ஆதீனப் புலவர்.

**"தன் நாயகன் பேர் தன் வாயாற் கூறாக்
கற்பியலார் போல்"**

என்று நாவலர் பிள்ளைத்தமிழில் ஸ்ரீலஸ்ரீ நாவலர் அவர்களைப் புகழ்ந்தவர் பண்டிதர் ஐயா. பண்டிதர் ஐயாவுக்கும் இது சாலப்பொருந்தும். நாமறிந்த மட்டில் நாவலர் அவர்களையே தம் மானசீகக் குருவாகக் கொண்டவர் பண்டிதர் ஐயா. எனவேதான் நாவலர் அவர்கள் விட்ட இடத்திலிருந்து பெரியபுராண சூசனப்பணியைத் தொட்டு நிறைவேற்றினார் போலும்.

பண்டிதர் ஐயாவின் உயிர்மூச்சு முழுவதூஉம் பெரியபுராணம்தான். புராணபடனம் செய்வதிலிருந்த ஈடுபாடு அலாதியானது. இரண்டோ மூன்று பாடல்களுக்கே உரை கூறுவார். அதற்குள்ளே தமிழ்க்கவிதைநயம், சித்தாந்தநயம், அறக்கோட்பாட்டுநயம் முதலிய யாவும் நிறைந்து வழிந்தோடும்.

பெரியபுராணத்தையே தம் உயிர் மூச்சாகக் கொண்டு, தொண்டுபடுகிழவராகவே வாழ்ந்து வந்ததன் பயனாலே திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீன குருமகாசந்நிதானம் அவர்களின் ஏற்பாட்டிலே திருவாரூர்த் திருமூலட்டானத்தில் சிவபூசை எழுந்தருளப் பெற்றனர் என்ப. இது 1997 இல் நிகழ்ந்தது. இதிலிருந்து ஜீவபர்யந்தம்வரை தினமும் சுமார் 3 மணிநேரம் விரிவான சிவபூசையைச் செய்து சித்திபெற்றார்கள்.

பத்தாவிற்கேற்ற பதிவிரதையாகிய ஞானலக்குமி அம்மாளும் பூவெடுத்து, நீரெடுத்து, தூபதீபங்கள் அமைத்து, நிவேதனம் தயார் செய்து கூட இருந்து பூசிப்பார்.

இதனைக் கண்டோர் பாக்கியசாலிகளே! சிவபிரான் திருவையாற்றிற் சைவனாகியிருந்து தம்மைத் தாமே பூசித்துக்காட்டியதே இப் பூசனைக்கு ஒக்கும். சிவபூசை பண்ணுவதாயின் பண்டிதர் ஐயாவைப் போலல்லவா பண்ணவேண்டும் என்று பார்த்தோர் ஆசைப்பட்டுப் பேசியதுண்டு. பண்டிதர் ஐயாவின் சிவபூசை மேடையில் திருக்கேதீச்சரத்து மகாலிங்கத்தின் படமும் நால்வர் பெருமக்கள், நாவலர் பெருமான் ஆகியோரின் படங்களும் தருமையாதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகநாததேசிக பரமாசாரிய சுவாமிகளின் படமும் என்றும் இடம்பெற்றிருந்தன. இதுவே பண்டிதரையா யாரென்பதையும் அவரின் போக்கும் நோக்கும் யாதென்பதையும் அறியப் போதுமானவையாக இருந்தன.

வடமொழியும், தென்தமிழும், மறைகள் நான்கும் ஆயவர் சிவபெருமான். சித்தாந்த சைவருக்கு இருமொழியும் இருகண்கள்போல் இருக்கவேண்டும். மொழியபிமானமும் ஆணவக் குணங்களில் ஒன்றேதான்! "வேதமொழியர்" (திருவாசகம்)

"வேதமோதி வெண்ணூல் பூண்டு" (தேவாரம்)

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல்
ஓதும் பொதுவும் சிறப்புமென்றுணர்க" (திருமந்திரம்)

"எண்ணியாகமம் இயம்பிய இறைவர்" (பெரியபுராணம்)

தொடர்ச்சி 23ஆம் பக்கம்.....

உ
சிவமயம்

# திருவருள் தரும் குரு (கந்தையா பண்டிதர்) அருள்

திருமதி. க. சொர்ணலிங்கம். இரத்மலானை.

பக்குவ ஆன்மாக்களுக்கு இறைவன் குருவாக வந்து தீட்சை கொடுத்து ஆட்கொள்வான் என்பது யாம் அறிந்தது. சகலராகிய எமக்கு பக்குவம் வாய்ந்த மற்றொரு ஆன்மாவை இடமாகக் கொண்டு மானிடனாக வந்தே ஆட்கொள்கிறார். இறைவன் இடமாகக் கொண்டு ஆட்கொள்கிற குறிப்பிட்ட அந்தப் பக்குவ ஆன்மாவுக்கு இறைவன் தன்னை இடமாகக் கொண்டுள்ளமை தெரிந்தும் இருக்கலாம் தெரியாமலும் இருக்கலாம். இவ்வாறிருக்கும்போது பண்டிதரையா அவர்கள் எவரையும் குருவாகக் கொள்ளவுமில்லை எவரையும் சீடனாகக் கொள்ளவுமில்லை என்று சில குறை குடங்கள் குலுங்கினால் அதை யாரும் கருத்தில் கொள்ளத் தேவையில்லை. குருவால் தீட்சை முறைகளில் ஒன்றினால் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவற்றால் ஆட்கொள்ளப்படும் சீடன் அதை உணர்ந்து கொள்வான். ஆனால் அதன்பின் சீடன் குருவை சிவனாய் வழிபட்டு ஏதாவது ஒரு விதத்திலாவது தொண்டு செய்து ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், சிந்தித்தல், தெளிதல், ஞானநிட்டை கூடல் ஆகியவற்றை அக் குருவிடம் பயின்று (பயில்தல் என்பது பாடம் கொள்வதே என்பது மட்டுமல்ல) குருசீடத் தொடர்பை வலுப்படுத்திக் கொள்ளவேண்டும் இல்லையேல் வந்தது போய்விடும் ஆபத்துண்டு. வந்தது போய்விட்டது என்று மாணிக்கவாசகர் கவன்றதைத் திருவாசகத்தில் ஆங்காங்கே காண்கிறோம். ஆனால் இவர் அவரைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டார் என்பதே உண்மை. இவ்வாறு வலுப்பெற்றுக் கொண்ட குருசீடத் தொடர்பு அத்துவித முத்திக்கு வழிகாட்டும் என்பது சித்தாந்த சாத்திர முடிபு.

பண்டிதரையாவைக் குருவாகப்பெற்ற பாக்கியம் பெற்றவர்கள் எவராவது இருப்பின், அவரின் வாழ்நாளில் அவருக்குத் தொண்டு செய்யமுடியவில்லையே என்று கவலை கொள்வதை ஒரு விதத்தில் போக்கிக் கொள்ளலாம். அதாவது அவர் செய்ய விளைந்த, செய்ய ஆரம்பித்த, செய்து முடிக்காத, முயன்றும் செய்து பயன்காண முடியவில்லையே என்று அவர் அங்கலாய்த்த பல விடயங்களை நாம் அறிவோம். குருவுக்குச் செய்யும் பணியாக அவற்றைச் செய்ய முயல்வோம். முயற்சி திருவினையாக்கும். அவற்றில் இரண்டொன்றை இங்கு குறிப்பிடலாம் என நினைக்கிறேன்.

1. சில தலைமுறைகளுக்கு முன் இலங்கைத் தமிழர்கள் அத்தனைபேரும் சைவர்களாகவே இருந்தார்கள். இவர்களுக்கு இந்துக்கள் என்று நாமம் சூட்டப்பட்டதன் ஆபத்து நீக்கப்படவேண்டும்.

2. சிவனை முழுமுதற் தெய்வமாக அடிமனதில் பூரணமாக ஏற்றுக்கொண்ட மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள அத்தனை சமய நிறுவனங்களும் ஒன்று சேர்ந்து தமக்குள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைமை நிறுவனத்தை "உலக சைவசித்தாந்த தலைமையகம்" போன்ற ஒரு பெயருடன் இயங்க வைத்தல்.

3. தாம் முற்பட்டு ஆக்கிக் கொண்டிருந்த திருக்கேதீச்சர மான்மியம் போன்ற சில நூல்களை முடித்து அச்சேற்றல். ஆங்காங்கே அவ்வாறான சிலரின் முயற்சியால் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சில மன்றங்கள் இவ்வாறான

பணிகளில் ஈடுபடுவது மகிழ்ச்சிக்குரிய விடயம். குருத்தொண்டு சிறக்க, வாழ்க சிவனடியார்கள்.

இந்த உலகில் பிறக்கும் எந்த ஒரு ஜீவனும் மற்றொரு ஜீவனுக்கு அல்லது ஜீவன்களுக்கு உணவாகவோ வேறு ஒரு விதத்திலோ மிகப்பயனுள்ளதாகவே வாழ்ந்து மடிகின்றன. மனிதனாகப் பிறக்கும் ஜீவன்களுள் நூற்றுக்குத் 90 வீதமும் தமக்காகவே வாழ்ந்து மடிகின்றன. பிறப்புகளில் சிறப்பான மிக மேன்மையான மனிதப்பிறவியைப் பெற்ற நாம் அந்தப் பேற்றைப் பெற்றமைக்கான காரணத்தை நினைத்தும் பாராமல் அரும் பெரும் பாடுபட்டுப் பெற்ற இப்பிறவியை ஏனோதானோவென்று வாழ்ந்து அநியாயமாக்கிவிடுகிறோம். பாவபுண்ணியங்களான பிராரத்தை இன்பமாகவும் துன்பமாகவும் அனுபவித்து முடிப்பதற்குப் பதிலாக, இன்பத்தின் போது மகிழ்ந்து, இன்னும் அவ்வின்பத்தைப் பெருக்கிக்கொள்ள விரும்பியலைந்து வாழ்வை வீணாக்கிக் கொள்கிறோம். துன்பத்தின்போது எமது முன்னைய தீவினைகள் என்னும் சுமை எம்மைவிட்டு நீங்குகின்றன என அறிந்து மகிழாமல் அத்துன்பத்துக்குக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டவர்களை, எதிரிகளாக்கி அவர்களைத் துன்பப்படுத்துவதில் நாட்களை ஓட்டி வினைகளை அதிகரித்துப் பிறவிப் பெருங்கடலுள் மூழ்குகிறோம். ஆயினும் பத்துச்சதவீதமான மனிதர்கள் உலகத்துக்குப் பயனுள்ளவர்களாய் வாழ்ந்து, அவர்கள் மறைந்தபின்பும் ஆண்டுகள் பலவாகியும், அவர்களின் நினைவுகள், சாதனைகள், புகழ், நல்வாழ்வு நெறிகள் என்பன உலகத்துக்குப் பயனுள்ளதாகவும் ஆன்மிக முன்னேற்றத்தைத் தருவதாகவும் அமைந்து சிறப்படைந்தமை கண்கூடு.

எமது சமயக் கொள்கைகளிலும், அவற்றை அனுட்டித்துக் கொள்வதிலும் எமக்கு உள்ள அக்கறையின்மையும், உண்மையான கடவுள் நம்பிக்கை இன்மையுமே, சைவ சாத்திரங்களில் கூறப்பட்டவழி சமயாசார வாழ்வை அனுட்டித்து, துன்பத்தில் மட்டுமன்றி, எந்நேரமும் இன்புற்றிருக்க மனதை பழக்கிக்கொள்ள எம்மால் இயலவில்லை. இறைவனை மனத்திருத்தி வழிபட்டு, அதன் நிமித்தம் குருதரிசனத்தைப் பெற்று குருவருளால் திருவருளைப் பெற்றுத் திருவருளால் சிவன்தாள் அடைவது மனிதப்பிறவியைப் பெற்று, அதிலும் சைவனாகப் பிறந்து சைவாசார வாழ்வு வாழ்பவனுக்கு ஒன்றும் எட்டாக்கனியல்ல என்பதைத் தனது நூல்கள், பிரசுரங்கள், கட்டுரைகள், கண்டனங்கள் மற்றும் தாம் வாழ்ந்த சைவாசார வாழ்க்கை முறையால் உலகுக்கு விளக்கிக் காட்டிப் பலருக்கும் அவ்வாறான வாழ்க்கை நெறியில் ஊக்கத்தையும், ஆர்வத்தையும் உண்டாக்கியும், அதில் அவரவர்களுக்கு ஏற்பட்ட சந்தேகங்களை, ஐயங்களை, தெளிவின்மைகளைப் போக்கி, நற்குருவாய் வழிகாட்டிச் சிவமாய் ஆகியவர் நமது பண்டிதரையா அவர்கள்.

சைவர்களே! சைவம் என்பது சைவநெறி. இன்றைய பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் காட்டப்படும் கற்கை நெறியல்ல. இது சைவர்களாகிய நாம் நன்கு அறிந்து புரிந்து கொள்ள வேண்டிய ஒரு முக்கிய விடயம். பாடசாலைச் சமயநூல்களும், பல்கலைக்கழகப் பாடவிதானமும் நமது சைவசமயத்தைப் பிரதிபலிப்பனவாகக்கூட இல்லை என்பது பண்டிதரையாவின் ஆழ்ந்த மனவேதனையாக இருந்தது. அவ்வாறாயின் சைவசமயக் கொள்கைகளை அறிந்து அவற்றை அனுட்டிப்பது எப்படி என்ற வினா எழுகிறது. வேத, ஆகம, சைவசித்தாந்த அறிவு, இதைப் பெறுவது எப்படி, இதற்கு அவர் தரும்பதில் - சிவவழிபாடு மட்டுமே. இது எமதுபக்கப்பணி. மிகுதி அவன் பார்த்துக்கொள்ளுவான். எமது மூதாதையர்கள் அதிகமாய் அனைவரும் உரிய வயதில் சமய தீட்சை பெற்றுவிடுவார்கள். இயன்றவரை சந்தியாவந்தன அனுட்டானங்கள் செய்து கொள்வார்கள். காலையில் சிவ வழிபாடு முடித்தே அடுத்த காரியங்களில் ஈடுபடுவர். அதே பழக்கவழக்கங்களைத் தமது

பிள்ளைகளுக்கும் ஊட்டினர். இவ்வாறான பரம்பரை ஒழுக்குகளின் சிதறல்களே திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர், ஆறுமுகநாவலர், ம.க.வேற்பிள்ளை, சிவபாதசுந்தரனார், கொழும்பு திருவிளங்கம், ஸ்ரீமதி சதாசிவம், திருமதி. இரத்தினா நவரத்தினம் முதலான பலர்.

இவ்வாறு தத்தம் வீடுகளில் சைவ பாரம்பரியத்தை ஏற்படுத்தியதோடு சைவக் கோயில்களும், மடங்களும் கூட சைவ போதனைகளில் ஈடுபட்டு வந்தன. அந்நியராட்சியின் போது ஏற்பட்ட கிறிஸ்தவ போதனைகள், பாடசாலைகளில் கிறிஸ்தவ பாடநெறி போன்றவற்றைப் பின்பற்றி வந்ததே இன்றைய இந்து பாடநெறி. இவ்வாறான இந்து பாடநெறியை இந்துபோட் இராசரத்தினம் முதலான பலரும், அவர்களைத் தொடர்ந்து பண்டிதரையா போன்றவர்களும் கடுமையாகக் கண்டித்தனர். அவ்வாறு கண்டித்தமைக்கான காரணங்கள் பல. அதில் உலகம் முழுவதும் வளர்ந்து விளங்கிய சைவசமயத்தை ஆறு கூறுகளாக்கி அக் கூறுகளின் சேர்க்கைக்கு இந்து சமயம் எனப் பெயரிட்டு சைவத்தை அந்த ஆறு கூறுகளில் ஒன்றாக்கிய அவ்விடயத்தை, எமது கல்லூரிகளின் பாடநூல்களிலும் பல்கலைக்கழகப் பாட விதானத்திலும் உள்வாங்கிக் கொண்டது சைவ அழிப்பு நடவடிக்கைகளில் ஒன்று, எனப் பண்டிதரையா அவர்கள் தாம் மறையும் வரை மனவேதனையுடன் கண்டித்துக் கொண்டிருந்தார். தான் சிறுவனாக இருந்த காலத்தில், சிவன், அம்பாள், பிள்ளையார், முருகன், வீரபத்திரர், வைரவர் கோவில்களைவிட சைவர்கள் வணங்கும் வேறு கோவில்களைக் காண்பது அரிது என்றும், அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில விஷ்ணு கோவில்கள் இருந்தனவேயன்றி, கிருஷ்ணர் கோவில்கள், இராமர் கோவில்கள், அனுமர் கோவில்கள், ஐயப்பன் கோவில்கள், அப்பா கோவில்கள், அம்மா கோவில்கள் என்று சைவர்கள் பித்துப் பிடித்து அலையும் நிலை இருக்கவில்லை என்றும் கூறி அங்கலாய்த்துப் போவார்கள்.

ஆனால் பண்டிதரையா ஆற்றிய சொற்பொழிவுகள், வகுப்புக்கள், பிரசுரங்கள், கண்டனங்கள் மூலம் இந்த ஆபத்திலிருந்து தப்பிய சைவர்கள் இன்று ஏராளம். அவரின் கொள்கைகளைப் பின்பற்றி அதை நிலைநாட்டவும், அதற்காகப் போராடவும் முன்னிற்பவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. கவலையை விட்டுக் காரியத்தில் இறங்குவோம். உண்மை வெல்லும், வெற்றி நிச்சயம், சைவம் ஓங்கும்.

20ஆம் பக்கத் தொடர்ச்சி ....

எனவரும் திருமுறைப் பாடலடிகளைப் புறந்தள்ள முற்படுவோர் இன்று பெருகிவருகின்றனர். தற்காலத்திலே "சாதிகள் நெறியிற்றப்பா" (பெரியபுராணம்) என்பதும் மாற்றப்படுகிறது. பூசைக் கடமைக் கென்று சிவபெருமானால் படைக்கப்பட்ட குருபரம்பரையினரில் சிலர் தவறிப்போவதற்காக மற்றையவர்களுக்குப் பூசைத்தகுதியளிக்க முற்படுவது பொருந்தாது.

பசுவொன்று பாலெடுக்க விடாமல் உதைக்கிறதென்று பசுத்தோலை எருமைக்குப் போர்த்தி அதன் பாலை எடுத்தால் அது பசும்பாலாகிவிடாது.

இவைகள் பண்டிதர் ஐயாவின் தனித்துவமான சிந்தனையும் இயல்புகளுமாகும். பண்டிதர் ஐயாவின் நாமம் திருக்கேதீச்சரத்தலம் இருக்கும்வரை நிலைத்து நிற்கும். காரணம் அவர் எழுதிய திருக்கேதீச்சர மான்மியம் எனும் தலபுராணம் ஆகும்.

உ
சிவமயம்

# ஊருணி நீரெனும் ஞானக்கேணி

-சிவத்திரு ஈசான சொர்ணலிங்க தேசிகர். க. சொர்ணலிங்கம் B.Sc.
செயலாளர், கொழும்புச் சிவத்திருமன்றம்.

ஊரவர் யாவரும் உண்ணவும், உபயோகிக்கவும் உதவும் நீர் நிலைகளைத் தோண்டிக் கேணியாக்கிச் சுத்த நிலையிற் பேணுவோர் உண்மையான மக்கள் நலம் விரும்புபவர்களாகவே இருப்பர். பண்டிதர் கந்தையா என அழைக்கப்படும் இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் பற்றிப் பண்டிதமணி மட்டுவில் சி. கணபதிப்பிள்ளை அவர்கள் குறித்த சொற்றொடரே **"அவர் ஓர் ஊருணி"**யென்பது.

பண்டிதர் அவர்கள் சுயம்பிரகாசம் எனும்படி தானாகவே முயன்று நூல் பயின்றவர். அவர் பேச்சிலும் எழுத்திலும் தகுந்தோருடன் சம்பாசிப்பதிலும் சித்தாந்த ஞானத்தாகம் தீர்க்கும் ஊருணியாகவே திகழ்ந்தார். அவருடன் பழகிய யாவரும் அவரின் சித்தாந்த ஞானச் செய்திகள் வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவது போல தம்முள் எளிதில் உணரப்பட்டதை வியந்து கூறுவர்.


சிலகாலமாக அளவெட்டி சுப்பிரமுனிய சிவாச்சிரமத்தில் ஞாயிறு தோறும் திருவாசக விளக்கம் அளித்து வந்தார். அதில் பங்குகொண்டவர்கள் அவ்விளக்கத்தினூடாகத் தாம் மணிவாசகர் சுட்டிக்கூறியது போன்ற சிவப்பரம் பொருளைச் சிந்தித்த பொருள் எனும்படி மிகத்தெளிவாக உணர்ந்ததாகக் கூறிமகிழ்ந்தனர்.



பிற்காலத்தில் கொழும்புச் சிவத்திருமன்றம் உருவாகிப் பலவழிகளாலும் சைவத்தை அதன் தூய்மை கெடாது பேணும் வழிகளில் இன்றுவரை முயன்றுவருகின்றது. அக்காலம் சைவசித்தாந்தம் என்ற சொல்லே கொழும்பில் கேட்கப்படாத சொல்லாகவும் இந்துப்பதமே மேலோங்கி இருந்தகாலம். அதனால் தெளிவற்றதும், எமது நால்வர் நாவலர் வழி பேணப்பட்ட சைவ ஒழுக்கங்களைச் சற்றேனும் சுட்டாததுமான வேதாந்தக் கருத்துக்கள் ஆங்கிலம் மூலம் விளம்பரப்படுத்தப்பட்ட ஆன்மிக உரையாக நிகழ்த்தப்பட்டுவந்தன.

சைவச் சூழலில் பதி, பசு, பாசம் அறிந்து அதனைப்பரீட்சார்த்தமாகக் கொடியேற்றித் திருவிழாச் செய்து இறைவனின் பஞ்சகிருத்திய ஆலயவிழாக்களில் கண்டுகளித்த இடம்பெயர் மக்களுக்கு மேற்படி உரைகள் புதுமையாக இருந்ததால் அதனைத் தொடர்ந்து கேட்டுவந்தனர். இதனால் குடாகாய மகாகாயம் பதிபசுபாசம் போன்ற தத்துவக் கொள்கைகள் மிகத் தவறுதலாக முரணாக விளக்கப்பட்டு வருகின்றன என்பதைப் பண்டிதர் ஐயாவுக்கு உணர்த்தியபோது அவர் உடனடியாகச் சைவசித்தாந்தப் பொருள் போதிக்கும் - சாதிக்கும் நிலையமொன்றை உருவாக்குமாறு கேட்டுக்கொண்டார். அதன் காரணமாக அவரையே தாபகராகக் கொண்டு 2001இல் கொழும்புச் சிவத்திருமன்றம் நிறுவப்பட்டது. தொடர்ந்து அவரின் கட்டுரைகள் அடங்கிய "சனாதன சைவ விளக்கம்", "சைவஞான விளக்கம்" எனும் இரண்டு நூல்களும் மேலும் சித்தாந்த ஆசிரியரான சங்கரப்பிள்ளை அவர்களின் "சிவத்திரு வடிவங்கள்", "பிரணவக் கைவிளக்கு" முதலான நூல்களும் வெளியிடப்பட்டன.


பண்டிதரின் திருக்கேதீஸ்வர மான்மியம் 3ஆம், 5ஆம் காண்டங்களையும் ஆண்டுக்கொன்றாகச் திருக்கேதீச்சரத் திருப்பணிச் சபை வெளியிட கொழும்புச் சிவத்திருமன்றம் உந்துசக்தியாக இருந்தது.

தொடர்ந்தும் "ஏழிசையாய் இசைப்பயனாய்" எனும் நூலை வெளியிட்டுள்ளது. அவரின் சிவயோக வாழ்விலும் எமக்கு ஆசிவழங்கிக் கொண்டிருப்பதால் பல ஆய்வு முயற்சிகள் தொடர்கின்றன. அவரின் "நாம் சைவரே" என்ற சுலோகத்தைத் தாரகமந்திரமாகக் கொண்டு அவர்காட்டிய வழியில் கொழும்புச் சிவத்திருமன்றம் பயணித்துக் கொண்டிருக்கின்றது.


சித்தாந்த ஞானக் களஞ்சியம்



திருக்கேதீச்சர
மான்மியம்

சனாதன
சைவ விளக்கம்
மு.கந்தையா

திருத்தொண்டர் புராணம்
மு.கந்தையா B.A. அவர்கள்


இலக்கியகலாநிதி
பண்டிதமணி
ஏழாலை
மு.கந்தையா B.A.
அவர்கள்




சைவசித்தாந்த நோக்கில்
கைலாசபதி ஸ்மிருதி
மு.கந்தையா
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடு

கலிபோர்ணியா
மலிபு
மலைச் சாரல் மேவும்
கற்பகாம்பிகை
உடனுறை
கபிலாரண்யேஸ்வரர்
தோத்திரப்
பதிகம்
யாழ்ப்பாணம், ஏழாலை,
பண்டிதர் மு. கந்தையா
இயற்றியது



ஸ்ரீ புவனேஸ்வரி அம்மை
பிள்ளைத்தமிழ்






அரியவும் பெரியவும்

அரியவும் பெரியவும்


ஆலயந் தொழுவது
ஏன்? எப்படி?

3

SRI DURGA DEVI TEMPLE
of Tellippalai



சிவகாமி அம்மன்






பண்டிதர் மு. கந்தையா



சைவ ஞான விளக்கம்
2007



Saiva Siddhantha
The Treasure Trove
Pandithamani
Dr. M. Kandiah B.A (Hons)., D.Litt.
Saiva Siddhantha Manram, Canada



சித்தாந்தச்
செழும் புதையல்கள்





அபரக் கிரியை
விளக்கம்



திருப்பள்ளியெழுச்சி



திருவூஞ்சல்



அன்புநெறி



மாவைப் பிள்ளைத்தமிழ்



திருக்குறள் - ஒழிபியல
பரிமேலழகர் உரை விளக்கம்


பன்னிரு திருமுறைத் தொகுப்பு
அமரர்
சைவப்பெரியார் பண்டிதமணி
நினைவு வழிபாடு


திருக்கேதீச்சர மான்மியம்
5
2006


அபரக்கிரியைகள்
FUNERAL RITES


சித்தாந்த விளக்கில்
சைவக் கிரியைகள்


அரியவும் பெரியவும்

உ

சிவமயம்

# சைவக் கலங்கரை விளக்கனைய
# இலக்கிய கலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்கள்

- பண்டிதர் சிவநெறித்தேசிகர் வ. பேரின்பநாயகம்

அரை நூற்றாண்டுக்கு மேலாக எம்மை வழிப்படுத்திய சைவப் பேராசான் பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் சோர்வின்றித் தன்வாழ்நாள் முழுவதும் சைவமே தன் மூச்சாக வாழ்ந்ததை உலகம் அறியும்.

கற்க வேண்டிய தெல்லாம் கசடறக் கற்று, கற்றதன் வண்ணம் உலகறிய வாழ்ந்தவர். மாதவவச் சிவ ஞானமுனிவர் முதலாய பெரியவர்களின் கருத்துவழி வெளிப்படும்படியாக மலர்ந்தது பண்டிதர் அவர்களின் வாழ்வு. அவரின் வாழ்வையும் கருத்து வளத்தையும் பேரறிஞர்கள் பாராட்டினர். தமிழகத்துப் பேராசிரியர்களான க. வச்சிரவேலு முதலியார், சேக்கிழார் அடிப்பொடி க. இராமச்சந்திரன் முதலியவர்கள் இவரைத் தேடிவந்து பாராட்டி மகிழ்ந்த காட்சிகளை பன்முறை கண்டிருக்கின்றோம்.

பண்டிதர் ஐயா அவர்களை நிழல்போலத் தொடர்ந்து உறவாடுகின்ற பேறு அடியேனுக்குக் கிடைத்தமை திருவருட்பேறு என்றே கருதுகின்றேன். புராணபடனங்களிலும், திருமுறை விழாக்களிலும் அவர் வெளிப்படுத்திய கருத்துப் புதையல்கள் எனக்குப் பெரும் பொக்கிசங்களாகவே விளங்குகின்றன. நல்ல கருத்துக்களைத் தெரிவிக்கும்போது அதனைப் பண்டிதர் அவர்கள் மனமார வெளிப்படையாகப் பாராட்டுவார்.

தெல்லிப்பழைத் துர்க்கையம்மன் கோயிலில் நிகழ்ந்த பெரியபுராண படனத்தில் யோகி கார்த்திகேசு அவர்களின் பயனையும், வச்சிரவேலு முதலியார் அவர்களின் பேச்சையும் கேட்டு, பயன் சொன்னால் யோகி போலவும், பேசினால் வச்சிரவேலு போலவும் இருக்கவேண்டும் என்று அடியேனுக்குக் கூறினார். இளைஞர்களின் நல்ல முயற்சியைக் கண்டால் அவர் பாராட்டத் தவறுவதில்லை. சரியானவற்றுக்குப் பாராட்டும், பிழையானவற்றுக்குக் கண்டனமும் தருவது பண்டிதர் அவர்களின் இயல்பு.

## *சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள் என்னும் நூலுக்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வழங்கிய அணிந்துரையிலிருந்து*

'சிவன் சேவையே சீவசேவை' என்ற தொடரைத் திரித்து, 'சீவசேவையே சிவன் சேவை' என்றுரைக்கும் திரிபுவாதிகளின் விபரீதப் போக்கைக் கண்ணியமான முறையிற் கண்டித்து விடுகிறார். சந்தர்பபத்துக்குப் பொருந்த இரட்டையர் பாடலொன்று காட்டி ஊர்தோறும் ஆலயங்கள் அமைத்துக் கிரமமாக வழிபாடு செய்வதால் நல்வாழ்வு உண்டென்றும் வழிபாடுகள் வழுவிவிடின் வாழ்வு குன்றும் என்றும் காட்டியது பாராட்டப்பட வேண்டியது.

'தவமும் தவமுடையார்க்காகும்' என்ற தமிழ் மறைக்கேற்பச் சிவபுண்ணியஞ் செய்பவர்க்கு அப்புண்ணிய கர்மங்களை நெறிவழுவாது செய்வதற்கு ஆற்றுப்படுத்தும் பெருந் தவத்தைச் செய்பவராய் இவ்வரிய நூலை எழுதி வெளியிடுவதில் தமது ஓய்வு நேரத்தைத் தவப்பொழுதாக்கிக் கொண்டார் ஆசிரியர்.

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

உ
சிவமயம்

# என் குருநாதர்

- திருமதி பிருந்தா வசீகரன் B.A. Hons., M.A.(Tamil) பண்டிதரின் மாணவி.



சித்தாந்தவித்தகர், கலாநிதி, பண்டிதமணி மு. கந்தையா அவர்கள் வாழ்ந்த காலத்தில், அவர் பிறந்த அதே இடத்தில் நாமும் வாழ்ந்துள்ளோம் என்பதே பெரும் பேறுதான். என்னதான் பெரிய பட்டங்கள் வந்த போதும் தம்மை எப்போதும் பண்டிதர் மு. கந்தையா என்றே குறிப்பிடுவார். பள்ளிச் சிறார்கள் முதல் பேராசிரியர்கள்வரை அவரிடம் கற்றுப் பெரும் பேறடைந்துள்ளனர். தவத்திரு யோகர் சுவாமிகள் பற்றி

"கொழும்புத் துறைக் குருநாதன் - கோடி
கோடி முனிவர்கள் கொஞ்சிடும் பாதன்...."

என்று அவர் பாடிய பாடலை அம்மா கூறக் கேட்டிருக்கிறேன். அவ்வளவு இனிமையும், எளிமையும் மிக்க தமிழ். அது போல அவர் எழுதிய ஆய்வு நூல்கள், கட்டுரைகள், பல்வேறு ஆலயங்கள் மீது பாடிய ஊஞ்சல்கள், பிள்ளைத்தமிழ்கள் அவரது வித்துவத்திறனின் வெளிப்பாடுகள். அவர் புலமை பற்றிக் கூற எமக்குத் தகுதியில்லை. எனினும் அவருடனான என் மனப் பதிவுகளை அவரது நினைவுநாளில் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியும், பெருமையும் உண்டாகிறது.

என் தாய்வழிப் பேரனாரின் (இரத்தின வாத்தியார்) கைப்பிடித்து, கருணாகரப் பிள்ளையாரின் கோயில் செல்லத் தொடங்கிய பால்யப் பருவம் முதல் நான் அன்றாடம் கோயில் வாசலில் தரிசித்த மகான் பண்டிதர் மு. கந்தையா அவர்கள். அவரே எனது குருநாதராவார் என்பதை நான் கனவிலும் கண்டதில்லை. எமது அப்புவின் உறவினராய் எமது வீட்டுக்கு வந்து உரையாடுவதையும், அம்மாவிடம் "தேசிக்காய் இருந்தா கரைச்சுக் கொண்டுவா" என்று வாஞ்சையுடன் கேட்பதும் நிழலாய் தெரிகிறது. அம்மாவிடம் அவரைப் பற்றி விசாரித்த போது "எமது மாமா தமிழ், சமஸ்கிருதம் கற்றுப் பண்டிதரானது இவரிடம்தான்; இவர்தான் எம்மூரின் முதல் பண்டிதர்" என்பதை அறிந்து கொண்டேன்.

உயர்தரப் பரீட்சை முடிந்து பெறுபேற்றுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்த காலம். கொழும்பில் பெறுபேறு வெளியாகிவிட்டது. யாழ்ப்பாணம் வரக் காலதாமதமாகும். இன்று போல இணையத்தில் பெறுபேறுகளைப் பார்க்கும் வசதிகளும் அன்று எம்மூரில் இல்லை. மதியம் 2 மணியிருக்கும். மன ஆறுதலுக்காக எனது சிறிய தந்தையார் வீட்டுக்குச் சென்று வீடு திரும்பும் வேளை, வீதியின் முடக்கில் செருமலோசை, பண்டிதர்தான். மெதுவாகவே சைக்கிளில் சென்றேன். 'இந்தா' என அழைத்து, 'இங்கே வா' எனச் சைகை காட்டினார். ஒரு நாளும் என்னை அழைத்துப் பேசாத இப் பெரியவர் என்னை ஏன் அழைக்கிறார் எனத் தடுமாற்றத்துடன் இறங்கி அவரிடம் மெதுவாகச் சென்றேன். என்னை குறுகுறு என உற்றுநோக்கிய அந்த விழிகள்; எப்போதுமே மறக்க முடியாத அப்பார்வை. "மறு மொழி வந்திட்டுதாம். எப்படி? செய்திருக்கிறாயா? " என்று கேட்டார். "முடிஞ்சளவு முயற்சி செய்திருக்கிறன் வாத்தியார்" என்றேன். ஒரு நமுட்டுச் சிரிப்புடன் தலையசைத்து விடைபெற்றார். மறுநாள் பரீட்சை முடிவுகள் வெளிவரும் என பத்திரிகைச் செய்தி வெளியானதும், பிள்ளையாரிடம் சென்று முறையிட்டுவிட்டு கோயிலால் வெளியேறிய வேளை, தானே என்னை

அழைத்து, "எல்லாம் நல்லபடி நடக்கும், போட்டுவா" என்று கூறியதும், பிள்ளையாரைத் திரும்பிப் பார்த்தேன். குருவருளோடு, திருவருளும் கிட்டினாற் போல பிள்ளையாரின் தும்பிக்கையிலிருந்து நந்தியாவட்டைப்பூ கீழே விழுந்தது. மெய்சிலிர்த்ததோடு, நம்பிக்கையும் ஏற்பட்டது. மறுநாள் இரண்டரை இருக்கும், பாடசாலை சென்று பல்கலைக்கழக அனுமதியுடனான எனது பரீட்சைப் பெறுபேற்றை உறுதி செய்து கொண்டு, அம்மகிழ்ச்சிச் செய்தியை பெற்றோரிடம் தெரிவித்த பின்னர் பண்டிதரிடம் தெரிவிக்கச் சென்றேன். "என்ன மறுமொழி" என்று அவர் கேட்கவே, பெறுபேற்றைக் கூறிவிட்டு, அவர் கால்களைத் தொட்டு ஆசீர்வதிக்கும்படி கேட்டேன். கண்களில் கண்ணீரோடும், உதட்டில் புன்முறுவலோடும் ஆசீர்வதித்தார். "தமிழ், சமயப்பற்றோடு விளங்க வேண்டும். நன்றாக இரு" என்று கூறியது காதில் ரீங்காரமிடுகிறது.

உயர்தரப் பரீட்சை எடுத்த பின்னர் எம்மூர் சொர்ணாம்பிகா சமேத அம்பலவாணேசப் பெருமான் கோயில் திருவிழாவுக்கு தினமும் செல்வேன். அவ்வாறே அங்கு நடைபெறும் கோயிற் கிரியைகளில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்க்க அடிக்கடி பண்டிதர் வீட்டுக்கும் செல்வேன். அதற்குத் தகுந்த விளக்கம் எனக்கு ஏற்றால் போல வழங்கியவர், "திருவருட்பயன் கொண்டுவா படிக்கலாம்" எனக் கூறினார். அவரிடம் சென்று திருவருட்பயன் கற்கும் போதுதான் தெரிந்தது அவரது குழந்தையுள்ளம். அறிஞர்களுடன் உரையாடும் போது வித்துவத்திறனும், குழந்தைகளுடன் உரையாடும் போது குறும்புத்தனமும் புலப்படும்.

தன் கைப்பட எழுதிய "திருக்கேதீஸ்வர மான்மியம்" எனும் அரும் பெரும் பொக்கிஷப் பாடல்களை உறுப்பமைய எழுதித் தரும்படி என்னிடம் கேட்ட போது நான் செய்த பெரும் பாக்கியமாகவே கருதிச் செய்தேன். அச்சிற் பதிப்பித்த பின்னர் பிழைதிருத்தம் செய்து தரும்படி கேட்டதும் அவ்வாறே. இராமருக்கு அணில் செய்த உதவிதான் அது. எனினும் எனக்கு அது பெரும் பேறு. எமது சிவன் கோயில் வரலாறு பற்றியும், சிவன் கோயிலை முன்னேற்ற வேண்டிய பொறுப்பு இளைஞர்கள் கைகளில்தான் உள்ளது என்றும் அடிக்கடி கூறுவார். இன்றைய எமது சிவன் கோயில் முன்னேற்றம்காண அவர் இன்று எம்மத்தியில் இல்லை என்பது தான் பெருங்குறை.

பல்கலைக் கழகம் செல்லத் தொடங்கியதும் தமிழில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டதும் அவரிடம்தான். என் அறிவுக்கு எட்டியவரை அவர் இறுதியாகக் கூறியவை சைவமும், சைவசித்தாந்தமும் தான். சிறு தெய்வ வழிபாடு ஒழிப்புப்பற்றி அவர் கூறும் போது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் கண்டனப் போக்கின் சாயல் தென்படும்.

ஏறத்தாழ சமவயதினரான அப்புவை, கடும் சுகவீனம் உற்றிருந்த வேளை பார்க்க வருவார். அப்புவின் இறப்புச் செய்தி கேட்டதும் அவர் அடைந்த அதிர்ச்சி பற்றி அவர் மனைவியே என்னிடம் கூறியுள்ளார். அப்புவின் கல்வெட்டு எழுதுவதற்காக அவரிடம் சென்றேன். சுகவீனமுற்ற வேளைகூட எழுந்து வெளியே வந்து அவர் கூறக்கூற நான் குறித்துக் கொண்டேன். எமது அப்புவின் தந்தை நாகமுத்துச் சட்டம்பியார், தமது சமவயதினரைப் பனைநாரால் பிணைத்துக் கொண்டு வந்து பாடம் சொல்லித் தந்ததை நினைவூட்டிக் கூறினார். நாகமுத்துச் சட்டம்பியார்⟶ இரத்தினவாத்தியார் ⟶ சண்முகலிங்கம் பண்டிதர் என மூன்று தமிழாசிரியர் பரம்பரையில் நான்காவது பரம்பரையும் தொடரும் என அவர் கூறியபடி நானும் ஒரு தமிழாசிரியராகி நான்காவது பரம்பரையில் ஒருவராய் விளங்குவது பெருமையே. அவர் இறப்பதற்கு ஓரிரு கிழமைகளுக்கு முன்னரும் ஆஞ்சனேய வழிபாட்டுக்கான கண்டனம் ஒன்றை பத்திரிகையில் பிரசுரிப்பதற்காக என்னைக் கொண்டு எழுத வைத்தார். எனினும் அது பத்திரிகையில் வெளிவரவில்லை. பெரும் தெய்வ வழிபாடு பின்னே சென்று சிறு

தெய்வ வழிபாடுகள் முன்னணிக்கு வருதல் கலிகாலத்தின் அறிகுறி என்பதை அன்றே அறிந்து கொண்டேன்.

ஏழாலை அம்பலவாணேஸ்வரப் பெருமான் மீது எத்தகு பக்தி கொண்டாரோ இறைவனும் அவர் மீது காதல் கொண்டுள்ளான் என்பதை அவர் இறப்பே புலப்படுத்தியது. தன் ஆலய மகோற்சவ தினத்திலேயே அவருயிரைத் தன்னுடன் இணைத்துக் கொண்டான் அப்பரம்பொருள். அவரின் மரண வீட்டுக்கு வந்த அறிஞர்கள் கூட்டத்தைப் பார்த்த பின்னரே அவரது புலமை புலனாயிற்று. எம்மூரில் அவரது புகழும், பெருமையும், ஆற்றலும் பெரும்பான்மையானோருக்குத் தெரியவில்லை. ஆனால் அயலூர் மட்டுமல்ல; அயல் நாட்டவர்களே அவரது புலமையை மதித்துப் போற்றுகின்றனர். அவர் எழுதிய நூல்களும், கட்டுரைகளும் அவர் புலமையை என்றும் பறைசாற்றும்.

# ஏழாலை
# இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா B.A. நூறாண்டு அகவை நிறைவு விழாப் பேச்சுப் போட்டியில் பரிசு பெறுவோர்

## பாலர்பிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம்பரிசு | : நவதீசன் சங்கவி | - யா/ஏழாலை மகாவித்தியாலயம். |
| இரண்டாம்பரிசு | : மதனமோகனராஜ் ஹரிஷ்ராஜ் | - யா/ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை |
| மூன்றாம் பிரிவு | : கஜேஸ்வரன் சதுஸ்ரிகா | - கருணாகரப்பிள்ளையார் மடாலய அறநெறிப்பாடசாலை. |

## கீழ்ப்பிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம்பரிசு | : கரிகாலன் பிரியாஷ் | - கருணாகரப்பிள்ளையார் மடாலய அறநெறிப் பாடசாலை. |
| இரண்டாம்பரிசு | : சிவநாதன் பவித்திரா | - ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலை |
| மூன்றாம்பரிசு | : கனேந்திரன் கவிஷ்மிகா | - கருணாகரப் பிள்ளையார் மடாலய அறநெறிப் பாடசாலை |

## மத்தியபிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம்பரிசு | : சிறீதரன் நர்த்தனன் | - கருணாகரப்பிள்ளையார் மடாலய அறநெறிப் பாடசாலை |
| இரண்டாம்பரிசு | : நாகதேவா திறனாளன் | - கருணாகரப்பிள்ளையார் மடாலய அறநெறிப் பாடசாலை |
| மூன்றாம்பரிசு | : கஜேந்திரன் நிவேதிகா | - கருணாகரப்பிள்ளையார் மடாலய அறநெறிப் பாடசாலை |

## மேற்பிரிவு

| | | |
|---|---|---|
| முதலாம்பரிசு | : ஈஸ்வரன் மதுமிதா | - யா/ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம். |
| இரண்டாம்பரிசு | : அமிலகாசன் சுகந்தினி | - யா/ஏழாலை மகாவித்தியாலயம் |
| மூன்றாம்பரிசு | : சிவநாதன் சிவாஜினி | - கருணாகரப்பிள்ளையார் மடாலய அறநெறிப் பாடசாலை |


02.07.2017 இல் ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ள விழாவில் பரிசுகள் வழங்கப்பெறும்.

உ

சிவமயம்

# ஏழாலை மண்ணில் மலர்ந்த சைவ நறுமலர்

இ.கணேசராசா - தலைவர்,
இலக்கியகலாநிதி மு.கந்தையா ஞாபகார்த்த, சித்திவிநாயகர் நூல் நிலையம், ஏழாலைமேற்கு.



ஏழாலை மண்ணில் பல மலர்கள் மலர்ந்துள்ளன. அவற்றுள் சைவநறுமணம் பரப்பிய மலர் எங்கள் இலக்கியகலாநிதி பண்டிதர் மு. கந்தையா B.A. அவர்கள் ஆவர். சாதாரண விவசாய குடும்பத்தில் பிறந்து தனது அயரா முயற்சியால் கற்றுத்தேறி யாழ் பல்கலைக் கழகத்தால் கௌரவ இலக்கிய கலாநிதிபட்டம் பெற்ற மேதை. இவர் சைவசமய இலக்கியத்துறைக்கு ஆற்றிய பணி இவரை நினைவுகூர வைத்துள்ளது. தென்மொழி, வடமொழி, ஆங்கிலம் ஆகிய மூன்றிலும் சிறந்த புலமை பெற்றவர்.

ஆசிரியராக தனது வாழ்நாளைக் கழித்தவர். இவரிடம் பாடசாலையில் கற்ற மாணவர்களைவிட இவரிடம் தேடிவந்து பெற்ற மாணவர்கள் அநேகம்பேர் என்று கூறலாம். இவர் சைவசித்தாந்த வகுப்புக்களைக் காலத்துக்குக்காலம் ஊர்கள் தோறும் நாடிவந்தோருக்கு காட்டிச் சிறப்பித்தவர். இவரின் சிந்தனை எப்போதும் கற்ற நூல்களை அலசி ஆராய்ந்து தெளிதலுடன் அதனைப் பொருத்தமாக உளந்து எடுத்து உறைப்ப சொல்வதாகவும் இருந்தது.

இவர் வகுப்புக்களை நடத்துவதுடன் மட்டும் நின்றுவிடாது பல நூல்களையும் எழுதியுள்ளார். சாதாரணநிகழ்வுகளில் உள்ள சமய உண்மைகளை எடுத்துக் காட்டுவதில் சிறந்தவர். சித்தாந்த நூல்கள் சமயக் கருத்து மூலம் சித்தாந்த வழிகாட்டல் என்பனவற்றுடன் 1. மாவைபிள்ளைத்தமிழ் 2. நாவலர் பிள்ளைத்தமிழ் 3. வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ் 4. சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரியம்மை பிள்ளைத்தமிழ் என நான்கு நூல்கள் எழுதியுள்ளார். ஆறுமுகநாவலர் அவர்கள் எழுதிய பெரிய புராணத்தின் சூசனத்தைத் தொடர்ந்து எஞ்சிய நாயன்மார்கள் வரலாற்றுக்கு சூசனம் எழுதி சூசனம் என்ற நுண்பொருள் விளக்கத்தை தந்தவர் பண்டிதர் மு. கந்தையா அவர்கள். அது மட்டுமன்றி திருக்கேதீச்சரநாதர் மீது மான்மியம் என்ற பெயரில் 1. புராதன காண்டம். 2. பொற்பொளிர்காண்டம் 3. கரந்துறை காண்டம். 5. நித்தியநைமித்திய காண்டம் என 4 நூல்கள் எழுதியவை வெளிவந்துள்ளன.

பண்டிதர் அவர்கள் சிறிது காலம் எம் ஊரில் உள்ள சாதுசங்கம மடாலயத்தில் பூசை செய்யும் பேறு பெற்றவர். இவ்வாலயத்தில் காலை மாலை என இருவேளை பூசைகள் இடம் பெறும். இவர்கள் பூசைக்குச் செல்லும் வேளைகளில் ஆலயக் கிணற்றில் நீராடிய பின்பே உள் நுழைந்து சிவபூசை செய்வது வழக்கம். பூசைக்குரிய வடமொழி மந்திரங்கள் இவருக்குப் பாடம் என்பதை இவரிடம் சந்தேகம் கேட்டுத் தெளியவந்திருக்கும் தெளிவுபடுத்தும் போது அவர்கள் அடக்கமாக செவி மடுத்ததே உண்மைக்காட்சி. அப்படி அறிந்த இவர் ஆலய பூசையில் தமிழ் வேதம் ஓதியே செய்வது நாம் அறிந்ததே.

நூல்களைத் தேடி கற்றல் சிந்தித்தல் தெளிதல் அவரின் குணம். சைவசமயமே உயிர் மூச்சாகக் கொண்டவர். சமயத்தில் ஏதாவது தவறு காணப்படுமாயின் யார் எவர் என பாராது கண்டனக் குரல் எழுப்புவார். சைவசித்தாந்தம் என்பது வாழும் நெறி என்ற வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர். சித்தாந்தம் ஏட்டுக்கல்ல வாழ்வுக்கு என வாழ்ந்து வழிகாட்டியவர். சிந்தனையும் பேச்சும் சிவம் மணக்கும். அவர் வழி வாழ முயல்வோமாக.

உ

சிவமயம்

# "தன் அழுக்கைத் தானே துடைக்க வேண்டும்"

-காப்பியதாசன் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரன் செயலாளர் ஆ.தி.பாஷாபிவிருத்திச்சங்கம்.

சான்றோர் இனத்திருத்தலும் சிற்றினம் சேராதிருத்தலும் ஒருவனை நல்லோனாக்கும். நல்ல சேர்க்கையினால் சிந்தனை சிறக்கும். உயர்நெறியோடு வாழும் உணர்வுகளைக் கிளர்ந்தெழச் செய்யும். ஊர்கள் தோறும் இத்தகையோர் பெருகவேண்டும். அந்தவகையில் ஏழாலைக்குப் பெருமையை உண்டாக்கியவருள் பண்டிதமணி மு. கந்தையா சிறப்பிடம் பெற்றுள்ளாரெனக் கருதுகின்றேன். பெரியோர் ஓர் ஊருக்கு மட்டும் உரிமையானவர்களாக மாட்டார் என்பதும் ஒருதலை என்பதால் பெரியோருடன் பழகுதல் இன்பந்தருவதாகும்.

ஏழாலையூர்ப் பண்டிதமணியின் வீட்டிற்கு ஒருநாள் பத்துமணியளவில் சென்றிருந்தேன். பண்டிதமணியின் மகளார் 'தேவி' அவர்கள் முற்றத்தில் நின்ற என்னை வீட்டுக்குள் வருமாறு அழைக்கின்றார். உரையாடலில் என்குரலை இனங்கண்டு கிணற்றடிக்கு வரச்சொல் என்கின்றார். மலைநாட்டு உழவன் போன்று மிக நீளமான 'கௌபீனம்' அணிந்த ஒருவராகக் கிணற்றடியில் நிற்கும் பண்டிதமணியைக் கண்ட என்கண்கள் கிணற்றடிக்குச் செல்லும் துணிவைத் தடுத்தன. அவர் இடையூறாக நினைக்காத போதும் என்கால்கள் தளர்நடைக்கு ஆட்பட்டுக் கொண்டன. உள்ளுணர்வாம் மேம்பாடுடைய ஐயா அவர்கள் நான் மட்டுந்தான் நீ ஆம்பிளைதானே வாவெனக் கலகலப்பாக அழைத்தார். நானும் சென்று கிணற்றடிக் கட்டில் அமர்ந்தேன். வழமைபோல இயல்பாகவே எமது உரையாடல் தொடர்ந்தது. பேச்சின் இடையே உடுப்புக்களைத் தோய்த்தலில் களைப்பில்லையா? யாரையேனும் உதவிக்குக் கேட்கலாமே எனத் தயங்கியவாறே கேட்கவும் செய்தேன் அனுதாபத்துடன். அவரிடம் எந்தவித சலனமும் இல்லை. சிரித்த முகத்துடனே பதில் தந்தார். "தன்னிடத்து வந்து சேரும் அழுக்குகளைத் தானேதான் துடைக்க வேண்டும் என் அழுக்கை யான் போக்காது யார் போக்குவது புற அழுக்கைப் போக்க அகமும் தூய்மைபெறும்" என்ற அந்தப் பதில் - எனக்கு - என் சிந்தனைக்கு விருந்தானது.

உடலின் இயல்பு அழுக்கை வெளியேற்ற முயல்வது - வியர்வையாக, மூத்திர மல கோசமாக வெல்லாம் வெளியேற்ற முயல்வதும் புறத்தே படியும் வியர்வையைத் தாங்கிக்கொள்வதும் உடலின் இயல்புதான். மனத்தது தூண்டுதலே படியும் அழுக்கைக் கழுவச் செய்வது. அவ்வழுக்கைக் கழுவிக் கொள்ளாது விட்டால் நோயுண்டாகும். அழுக்கை மிகுதியாகச் சேராமற் தடுப்பது உடை - அது புற அழுக்கை உடலிற் சேரவிடாது தடுக்கும். - அந்த உடையானது தான் அழுக்கடைந்து உடலைக் காக்கும்.

அழுக்குகளைத் துடைக்காது விட்டால் அகமும் அழுக்காகும். புற அழுக்குகள் நீங்குமிடத்து அக அழுக்கும் நீங்கி மனமும் தூய்மை பெறும் என்ற கருத்தை மனம் சிந்தனையாற் பெற்றுக் கொண்டது.

பெரியவர்களோடு உரையாடும் போது <u>முந்து கிளவாச் செறிவு</u> வேண்டும். முந்து கிளவாச் செறிவாவது அவசரப்பட்டு ஏதேனும் சொல்லுதல். அவ்வாறு ஏதேனும் சொல்லி பெரியவர் வாயிலிலிருந்து வரும் நல்லறிவை அந்த நல்லறிவான விளக்கத்தை இழந்து விடக் கூடாது. நன்றாகத் தெரிந்ததைச் சொல்கின்றார் என்றாலும் கூட நாம் தெரிந்தவர் போலக் காட்டக் கூடாது. அவ்வாறு காட்டாதிருந்தால் சிலவேளை அதற்கூடாக மேலுஞ்சில

அறியலாமன்றோ! இவ்வாறாக, பேரறிஞராகிய இவர்வாயிலில் இருந்து வரும் விருந்துக்காக நான் செவிசாய்க்கின்றேன். கருத்துக்களைப் பரிமாறிக் கொள்கின்றோம்.

அகம் புறம் இரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்திருப்பதனால் ஒருவர் தன்னழுக்கைத் தானே போக்கித் தூய்மை செய்தல் வேண்டும். உடலின் உள்ளே உள்ள கழிவுகளை அது வெளியகற்றும் போது ஈரப்பதனை உடைபெற்று தான் அழுக்கடைந்து துர்மணத்தைப் பெறுகின்றது. ஆக, புற அழுக்கை நீக்கப் புத்துணர்ச்சி ஏற்பட்டு நல்ல சிந்தனை வயத்ததாகி அகமும் தூய்மை பெறுகிறது. பொறாமை முதலிய அக அழுக்காயிருந்தாலும் புற அழுக்காயிருந்தாலும் தானே முயன்று தம்மைத் தூய்மை செய்தல் அவசியம். இதுபோன்று எத்தனை எத்தனையோ அமிசங்களைப் பெரியோர் பலரிடமிருந்தும் எம்மாற்பெற முடியும்.

இத்தகைய அறிவுக் களஞ்சியமாகப் பின்னாளில் விளங்கிய இவர் 1917 - 2002 வரை ஊன் உடலோடு நடமாடியவர். தன் ஆரம்பக்கல்வியை சைவ சன்மார்க்க வித்தியாசாலையிற் பெற்றார். இவரின் கல்வி விருத்திக்கான நல்ல அடித்தளம் இங்கேதான் உண்டானது. தான் கற்ற பாடசாலையிலேயே ஆசிரியப் பணியைத் தொடங்கிய இவர் 1938 தொடக்கம் 1951 வரை சேவையைத் தொடர்ந்தார். பின்னர் வேறு சில இடங்களிலும் பணிசெய்து 1972இல் 55 வயதில் ஓய்வு பெற்றார்.

ஓய்வின் பின்னர் நூலாராய்ச்சியிலும் சைவசித்தாந்த வகுப்புக்களை நடத்துவதிலும் நூல்களை எழுதுவதிலும் அதிக சிரத்தை எடுத்துக் கொண்டார். சைவசித்தாந்தத்தில் ஊறித் திளைத்த இவர் சைவம், இந்து இரண்டிற்கும் உள்ள இடைவெளியை ஓர்ந்துணர்ந்தார். சைவம் என்பதை நிலைநாட்டும் துணிவுடன் உழைத்தார். சான்றுக்கு அவரது 'பா' ஒன்றைக் காண்போம்.

அன்றுமின்றும் என்றுமுயிர்க் காக்க மாகும்
ஆன்மசிவ சம்பந்தத் தடக்கம் முற்றும்
நன்றுசெறிந் தொளிர்சைவம் வழக்கு நிற்க
நாதியற்ற இந்துவெனும் நாமம் சூடித்
துன்றிவரு சுமார்த்தபுரி சூழ்ச்சிக் கெல்லாம்
துணைபோக வேண்டாம்நீர் தூய சைவம்
நின்றுவழக் கினிற்செழிக்க நீங்கள் போற்றும்
நிலையமெலாம் அதுவொன்றே நிலவச் செய்மின்.

இது போன்று கரணமுறையில் பெரும்பாலன வேண்டாதவை என விளக்கிக் கண்டித்தார். "பண்டிதர் சைவத்தின் காவற்சிங்கம். யார் சைவக் கருத்துக்களுக்கும் மரபுவழிவந்த சைவாநுஷ்டானத்துக்கும் மாறான கருத்துக்களை வெளியிடுகின்றார்களோ, உடனே பாய்ந்து பண்டிதர் கர்ச்சிப்பார். அவர் நண்பரோ, உறவினரோ, பேராசிரியரோ, சமயப்பெரியாரோ என்று பார்க்கமாட்டார். அதனால் அநேக நண்பர்கள் பகையாளர்கள். பேராசிரியர்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டார். பிராமணக்குலத்தினர் பலருடைய கோபத்துக்கும் ஆளானார். சுத்த சைவசித்தாந்த மரபொழுக்கத்துக்கு மாறான கடவுள் வழிபாடுகளை அவ்வப்போது கண்டித்துப் பல பெரியார்களின் வெறுப்பை ஈட்டிக் கொண்டார். அவர் தனது கண்டனங்களைக் கல்லச்சிட்டுப் பரப்புவார்." (பண்டிதர் க. சச்சிதானந்தன் கட்டுரையிலிருந்து)

பண்டிதமணி அவர்கள் காத்திரமான நூல்களின் ஆசிரியர். அதனால் அவர் வீட்டு நெறியில் எவ்வளவு தெளிவுள்ளவர் என்று நாம் தெளியலாம் என்பதை அவர்தம் கட்டுரையொன்று பேசுகின்றது. "தமிழ் இலக்கிய வடிவங்களில் அலங்கார வனப்புஞ், சுவைநலச் சிறப்பும் மிக்கதாகப் போற்றப் பெறுவது காவியம். இதற்கெனவுரிய பல்வேறு இலக்கணங்களுள் நாற்பொருள் பயக்கும் நடைநெறித்தாயிருத்தல் என்ற அமிசம் விசேட முக்கியத்துவம் பெறும்.

சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை உள்ளிட்ட தமிழ்ப் பஞ்ச காவியங்களில் சீவகன், கண்ணகி, மணிமேகலை யாதியோர் இந் நான்காவது நெறியாகிய வீட்டினைப் பெற்றதாகக் கூறப்பட்டிருத்தல் கண்கூடு. சமண பௌத்தச் சார்பினராகக் கருதப்பெறும் குறித்த நூலாசிரியர்களின் மதாநுசார அபிலாஷைக் கேற்ப அது ஒக்கில் ஒக்கலாம். உலகியலைத் துறத்தல் மாத்திரமே வீடு என்பது அவர்கள் மத சித்தாந்தம் கடவுட் கொள்கை அவர்க்கில்லாமையும் பிரசித்தம். துறந்தபின் அப்பால் ஆகப்போவது என்ன. என்பது கேள்வி ஆனால் அலௌகீக ஆகாசத்தையடைதல், நிர்வாணமாதல், அதாவது உடலுயிர்ப்பண்டமென்றிருந்த பஞ்சகந்தக்கூடு வெடித்துப் பிளந்து போதல் என்னுமளவே அம்மதங்கள் இவ் வினாவுக்கிறுக்கும் விடையாயிருக்கும்.

அரிதரிது மானிடராதல் அரிது என விதந்துரைக்கப்பெற்ற அருமருந்தன்ன மனிதவாழ்வின் முடிந்த முடிபு விழாவேடிக்கைக்கு நிகழும் 'ரொக்கட்' விளையாட்டு மாதிரியில் ஒன்றாக முடிவதை ஆன்றமைந்த சான்றோர் அங்கீகரிக்க வகையில்லை. அவர்கள் நோக்கில் அத்தகு முடிபெதுவும் அர்த்தமற்ற முடிபேயாதல் ஒருதலை.

வீட்டியலை இலக்கணவகையால் அறிவுறுத்தாவிடினும் நிமித்த வகையால் அறிவுறுத்தும், வள்ளுவநீதி துறவையே வீட்டுக்கு நிமித்தமாக நிறுத்தி, அத்துறவும் பற்றற்றவனாகிய கடவுட் பற்றினைக் கொண்டு உலகியலைத் துறக்கும் துறவாதல் வேண்டும் இறைவன் என்ற மெய்ப் பொருட்சார்பே உண்மைச் சார்பாகக் கொண்டு உலகியல் என்ற பொய்ப்பொருட் சார்பைத் துறக்கும் துறவாதல் வேண்டும் என்றே வற்புறுத்தியிருக்கக் காணலாம்

பிரசவ வேதனையால் நன்கலுத்துப்போய் இனிமேல் இதற்கிசைவில்லை என்று சங்கற்பித்திருந்தும் பிறகும் கர்ப்பவதியாகும் நிலைக்குரிய பிரசவ வைராக்கியம் போல இப்போதைய வாழ்க்கை இன்னல்களுக் கலுத்துப்போய் உலகியலைத் துறந்து சென்று பழையபடி அடுத்த பிறப்பெடுக்கும் நிலையிருக்குமானால் அது துறவன்று என்பதே தமிழ்மரபு கண்ட துறவியற் பண்பாதல் பிரசித்தம்...(மணிவாசகர் விழா மலர், காரைநகர்)

இவ்வாறு தம்கருத்தில் உள்ள தெளிவும் உறுதியும் நம்மையெல்லாம் ஈர்க்கும் வகையின.

பண்டிதமணியவர்கள் முப்பத்தைந்து நூல்களுக்குமேல் எழுதியவர். முடிந்த முடிபான கருத்துக்களைத் தருக்கமுறையில் எழுதியவர். சைவத்தமிழ் மாணவர் பலரை உருவாக்கியவர். ஆசாரசீலர் என்றும் நினைவிற் கொள்ளத்தக்கவர். நாமும் அவரைப் போற்றி அவர் நூல்களிற் திளைப்போமாக.

உ
சிவமயம்

# அறிவின் சிகரம் - மு. கந்தையா அவர்கள்

- மு. இந்திராணி பொறுப்பாசிரியர்
ஏழாலை மேற்குக் கருணாகரப் பிள்ளையார், சாதுசங்கம மட அறநெறிப் பாடசாலை.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று ஆன்றோர்கள் கூறியிருக்கின்றனர். இது மிகவும் அர்த்தம் பொதிந்த அமுத வாக்காகும்.

ஓர் ஊரில் கோயில்கள் நிறைந்து காணப்படும் போது அக்கோயில்களின் சூழலில் சைவச் சான்றோர்கள், ஆன்மிகப் பேரறிஞர்கள், சித்தாந்த வல்லுநர்கள், இலக்கிய கர்த்தாக்கள் உருவாகிப் புகழ் பெற்றிருப்பதைக் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

அத்தகைய ஆலயங்கள் மிகுந்ததும், அறிஞர்கள் நிறைந்ததுமான ஊர்தான் ஏழாலை ஆகும். இலங்கைத் திருநாட்டின் வடபுலத்தில் பிரசித்தி பெற்ற ஊர்களில் ஒன்றான ஏழாலையின் மேற்குப் பகுதியில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்துகளில் சாது சங்கம மடமும், மடாலயமும் ஸ்தாபிக்கப்பட்டு, அவ்விடம் சித்தர்கள் சிவனடியார்கள் வந்து தங்குமிடமாகவும், தியானம் திருமுறைப் பாராயணம் வேதாந்த சித்தாந்த ஆய்வுகள் நடைபெறும் இடமாகவும் விளங்கி சுற்றுச் சூழலெல்லாம் ஞான ஒளி சிந்திக் கொண்டிருந்த காலகட்டத்திலேதான் இலக்கிய கலாநிதி பண்டிதர் மு. கந்தையா அவர்கள் தோன்றினார்.

ஏழாலையின் மேற்குப் பகுதியிலே ஆசாரசீலர்களாய் வாழ்ந்து கொண்டிருந்த முத்தர் அன்னப்பிள்ளை தம்பதியரின் கடைசிப் புத்திரனாக 1917ஆம் ஆண்டு யூன் மாதம் 19ஆம் திகதி பிறந்தார். சிறுவயதில் இயல்பாகவே அவரிடம் துலங்கிய நுண்ணறிவும் சிந்தனைத்திறனும் கண்டு பெற்றோரும் மூத்த சகோதர, சகோதரிகளும் அவரை ஓர் அருந்தவச் செல்வராகவே வளர்த்தனர்.

கந்தையா அவர்களது மூதாதையர்களில் ஒருவரான பூசாரியார் என்று அழைக்கப்பட்ட அருளாளருடைய ஆசியும் அருட் பார்வையும் சிறுவயதில் அவருக்குக் கிடைத்ததும் அவரது அறிவுத் திறனுக்கு ஒரு காரணம் என்று சொல்லாலம்.

பண்டிதர் ஐயா அவர்கள் தமது ஆரம்பக் கல்வியை ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாசாலையில் தொடங்கி, அப்பாடசாலையிலேயே அக்காலத்திலிருந்த உயர் வகுப்பாகிய V.S.L.C. என்னும் வகுப்புவரை கற்று அப்பரீட்சையிலே சிறப்பாகச் சித்தி எய்தி அப்பாடசாலையின் முதன்மை மாணவராகத் திகழ்ந்தார். அதன் பின் அவர் உயர்கல்விக்காக வேறு பாடசாலையை நாடாமல் தமது சுய ஆற்றலைக்கொண்டு சயமுயற்சியால் தாமாகவே கற்று சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அடைந்தார்.

வித்துவான் கணேசையரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். இயல்பாகவே அமைந்த ஆற்றலால் ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றைக் கற்று பன்மொழிப் புலமை பெற்றார். தமிழ் டிப்ளோமா சான்றிதழ் பரீட்சையில் சித்தி பெற்ற கந்தையா அவர்கள் 1943ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சைக்குத் தோற்றி தேர்ச்சி பெற்று பண்டிதர் ஆனார்.

இவரது வாழ்க்கையில் 'கற்றல்' என்பது இவருடைய வாழ்நாள் முழுவதும் நிகழ்ந்து கொண்டே இருந்தது. 'கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு' என்பதற்கிணங்க என்றும் கற்பதிலேயே பெரும் பொழுதைக் கழிப்பார்.

தாம் பணி புரிய ஆரம்பித்த பின்பும் கற்பதற்கான வழிகளை இடங்களைத் தேடி ஏதாவது கற்றுக் கொண்டேயிருப்பார்.

கல்விக் கடலின் கரையைக் காண முயன்ற பண்டிதர் அவர்கள் முதலில் பணிபுரிய ஆரம்பித்தது தாம் கல்வி கற்ற பாடசாலையிலேதான்.

1938ஆம் ஆண்டு ஆசிரிய நியமனம் பெற்று சைவசன்மார்க்க வித்தியாசாலையில் பணி புரிந்த காலத்தில், பாடசாலைக்கருகே ஞானஒளி பரப்பிக் கொண்டிருந்த சாதுசங்கம மடத்தின் ஸ்தாபகர் அருளானந்தசிவம் அவர்களுடனும், சித்தாந்த வித்தகர் ஞானப்பிரகாசம் அவர்களுடனும் ஏற்பட்ட ஞானத் தொடர்பும், இணைப்பும் கந்தையா அவர்களை சித்தாந்தப் பேறறிஞராக்கியது.

1945ஆம் ஆண்டு ஏழாலையைச் சேர்ந்த சீனிவாசகம், தையல்நாயகி தம்பதியரின் புதல்வியான ஞானலட்சுமியைத் திருமணம் செய்து, சுசீலாதேவி, சத்தியபாமா என்ற இரு புத்திரிகளுக்குத் தந்தையாகி இல்லற வாழ்க்கையையும் இனிதாக அமைத்துக் கொண்டார்

1952ஆம் ஆண்டு பணியில் இடமாற்றம் பெற்று நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் ஆசிரியப் பணி ஏற்றுக் கடமையாற்றினார். எங்கெல்லாம் தமக்குக் கற்கும் வாய்ப்புக் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருந்த பண்டிதர் ஐயா நாவலப்பிட்டியில் பணிபுரிந்தபோது அண்மையாக இருந்த பேராதனைப் பல்கலைக் கழகத்துடன் தொடர்பை ஏற்படுத்தி பட்டப் படிப்பிற்கான இடைநிலைத் தேர்வில் அமர்ந்து சித்தி பெற்றார்.

அப்பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து கற்று பல பட்டங்கள் பெற விரும்பி அங்கேயே தம் ஆசிரியப் பணியை நிலையாக்க அவர் எண்ணியபோதும் 1958இல் இடம்பெற்ற கலவரங்களால் அங்கேயிருந்து இடமாற்றம் பெற்று வரவேண்டியதாயிற்று.

1959ஆம் ஆண்டு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் கடமைப் பொறுப்பேற்றார். அங்கு கடமை ஆற்றும் போது, சமஸ்கிருதத்தை சிறப்புப் பாடமாகக் கொண்டு இலண்டன் B. A. பரீட்சைக்குத் தோற்றி B.A. பட்டதாரி ஆனார்.

நூல் நிலையங்களே அவருக்கு அறிவுக்களஞ்சியமாகி ஆசான்களாக விளங்கின. நூல்நிலையங்களிலுள்ள நூல்களின் துணையோடு தம் சுய புத்தியால் அறிவினைப் பெருக்கி மும்மொழிப் புலமையாளராக, பண்டிதராக, கலைமாணியாக, மரபுவழிக் கவிஞராக, கட்டுரை ஆசிரியராக, நூலாசிரியராக, போதனாசிரியராக, பௌராணிகராக, பேச்சாளராக, ஆய்வாளராக, வேறும் பல முனைகளின் அறிவுத்திறன் காட்டி அறிவின் சிகரமாக விளங்கினார் கந்தையா அவர்கள்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்பதற்கிணங்க தாம் பெற்ற அறிவின்பத்தை மற்றவர்களும் நுகரும் வகையில் எழுதி எழுதி நூல்களாக உருவாக்கினார்.

ஆரம்பத்தில் பழையபாணி என்ற புனைபெயரில் தமக்கென்று ஒரு தனிப் பாணியை அமைத்துக் கொண்டு இந்துசாதனம் பத்திரிகையில் ஆக்கங்களைப் படைத்தார். இவரது நூலாக்கங்களை அச்சிடுவித்து வெளியீடு செய்ய பல ஆலய நிர்வாகங்களும், சங்கங்களும், கழகங்களும், வெளிநாட்டு நிறுவனங்களும் ஆர்வத்துடன் முன்வந்தன.

இவரது "குழந்தைவேற் சுவாமிகளும் குருபரம்பரையும்" என்ற நூலினை குழந்தைவேற் சுவாமிகள் சமாதிப் பரிபாலனசபை 1965ஆம் ஆண்டு வெளியீடு செய்தது. அடுத்தடுத்த வருடங்களில் தொடர்ந்து இவரது நூல் வெளியீடுகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. இவரது நூல்களில் பிரபந்தங்கள் வகையிலே மாவைப் பிள்ளைத்தமிழ், வல்லிபுர மாயவன் பிள்ளைத்தமிழ், சுதுமலை புவனேஸ்வரியம்மை பிள்ளைத் தமிழ், நாவலர் பிள்ளைத்தமிழ், மாவைப்பள்ளு என்பன அடங்கும். கேள்வி பதிலாக அமைந்த நூல்களாக அபரக்கிரியை விளக்கம், மரணத்தின் பின் ஆகிய நூல்கள் விளங்குகின்றன.

இலங்கையின் அதி உயர் விருதான சாகித்திய விருது பண்டிதர் அவர்களின் இரண்டு நூல்களுக்குக் கிடைத்துள்ளன. அவை நாவலர் பிள்ளைத்தமிழ், சிவஞானசித்தித் திறவுகோல் என்ற இரு நூல்களாகும்.

சித்தாந்தப் பேரறிஞராக விளங்கிய கந்தையா அவர்கள் ஆக்கிய சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள், சித்தாந்த செழும்புதையல் ஆகிய நூல்கள் இந்து சமய கலாசார அமைச்சின் பரிசு பெற்றவை.

திருக்கேதீஸ்வர மான்மியம் புராதன காண்டம் வடக்கு கிழக்கு மாகாணசபையின் சாகித்தியப் பரிசு பெற்றது. இவ்வாறு தமது நூல்களுக்காக மேலும் பல பரிசுகளைப் பெற்ற பண்டிதர் ஐயா அவர்களின் எழுத்துப்பணியின் உச்சக்கட்டமாகப் போற்றும் பணி ஒன்றுண்டு.

ஆறுமுகநாவலர் எழுதிய பெரியபுராண சூசனம் காரைக்காலம்மையார் புராணத்தோடு தடைப்பட்டுவிட்டது. மிகுதியாக இருந்த பகுதியை எழுதி நிறைவு செய்யும் பணியை இவரே செய்தார். கோலாலம்பூர் சைவசித்தாந்த நிலையம் பெரியபுராண சூசனத்தை முழுமையாக வெளியிட்டுள்ளது.

உப அதிபர் பொ. கைலாசபதி அவர்களின் சிந்தனைத் துளிகளைத் திரட்டி விளக்கமளித்து பண்டிதர் அவர்கள் எழுதிய "**சைவசித்தாந்த நோக்கிற் கைலாசபதி ஸ்மிருதி**" என்ற நூல் யாழ். பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டது. மேலும், "**அரியவும் பெரியவும்**" முதலான அரும்பெரும் நூல்களுடன் முப்பதுக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டு, ஏழாலையில் எண்ணிக்கையில் கூடிய நூல்களை எழுதியவர் என்ற பெருமை பெற்ற கந்தையா அவர்கள் யாழ். பல்கலைக்கழகத்தால் 1998ஆம் ஆண்டு **இலக்கிய கலாநிதி** என்னும் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

மு. கந்தையா அவர்களால் எழுதப்பட்ட நூல்களும், அவர் ஆற்றிய காத்திரமான கல்விப்பணிகளும் ஆராயப்படுமிடத்து அவர் அறிவின் சிகரம் என்று துணிந்து கூறக்கூடியதாக உள்ளது.

உ

சிவமயம்

# கலைமேதை கந்தையா சித்தாந்த சரபம்

- பேராசிரியர் முனைவர் வை. இரத்தினசபாபதி

திருவிளங்கும் திருநாடாம் திருவிலங்கைத் தொன்னகரில் நின்றும் வாழ்ந்தும் நீடுபுகழ் பெற்றும் தம்மைப் புரப்பதோடன்றித் தமிழையும் சைவசித்தாந்தத் தொன்னெறியையும் உலகறியப் பரப்பிய உயர் தொண்டர்கள் பலர்.

புலம்பெயரவேண்டிய சூழல் ஏற்பட்டுத் துன்புற்று வெளியேறி உழைக்கும் இலங்கையராயினும் சரி; புலம் பெயராமலேயே இருந்திருந்து வருந்தி நொந்து வாழ்வியல் என்னாகுமோ எனக் கலங்கி அல்லலுறும் இலங்கையராயினும் சரி தாய்த் தமிழையும் தமிழ்தந்த சைவ சித்தாந்தத்தையும் மறந்தும் மலைப்புற்றும் வாழ்ந்தார்கள் என்று இழிவமைத்துக்கூறும் வரலாற்றை அவர்கள் உண்டாக்கவில்லை. (யான் இலங்கையர் என்று குறித்தது இலங்கைத் தமிழர்களை மட்டுமே)

யான் இளமைக் காலத்தில் தமிழையும் சைவத்தையும் அறிந்தது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களால்தான். பின்னர் யான் வித்துவான் பட்டம் பெறத் தமிழ் படித்தபோது புன்னாலைக்கட்டுவன், சுன்னாகம், சி. கணேசையர் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையத்து வரைந்த குறிப்புரையால் யான் இலக்கண வளம் பெற்றேன்.

அவ்வகையில் சைவசித்தாந்த நுட்பங்கள் பலவற்றை விளக்கமாக எழுதி வெளிப்படுத்திச் சைவ சித்தாந்தம் விளக்கமுற்று எழுந்து ஒளிருமாறு தம்மை முழுமையாக அர்ப்பணித்துக்கொண்ட மாமேதை ஏழாலை, இலக்கிய கலாநிதி, பண்டிதர் மு. கந்தையா அவர்களின் தொண்டு போற்றுதற்குரியது.

'சைவசித்தாந்தம்' என்றால் பதி, பசு, பாசம் என்ற அளவோடு கொள்பவர் பலர். கட்டிடம் பெரியதுதான். புறச்சுவற்றின் அகலம் நீளம் உயரம் ஆகியவை தெரிந்தால் மட்டும் கட்டிடத்தை முழுமையாக உணர்ந்ததாக ஆகிவிடாது. கட்டிடத்தின் உள்நுழைந்தால் சிற்பம், அலங்காரம் முதலிய அருங்கலைகள் பல காணப்பெறும். அவைகளின் பெருமைகளையும் இணைத்துணர்ந்தால்தான் கட்டிடப் பார்வை முழுமைபெறும். அவைகளையெல்லாம் தெரிவதற்கும், இணைத்து அறிவதற்கும் நுகர்ந்து உணர்வதற்கும் வெவ்வேறு கலைப்பயிற்சிகளெல்லாம் தேவை. அத்தகைய நிலையில் 'சைவ சித்தாந்தம்' என்ற மாபெரும் பண்பாட்டுக் கட்டிடத்தின் முழுமையை உணர்ந்து தெளிவதற்குரிய கலைமேதையாக விளங்கியவர் அமரர் ஏழாலை கந்தையா அவர்கள்.

1980 முதல் ஐந்து முறை யான் இலங்கை சென்ற போதும் சைவசித்தாந்தக் கலைமேதையாக விளங்கிய கந்தையா அவர்களை நேரிற் கண்டு உரையாடும் பேறு பெறவில்லை. அது என் தவக் குறைவே.

கலாநிதி ஏழாலை கந்தையா அவர்கள் இயற்றிய அனைத்து நூல்களையும் யான் படித்ததில்லை. ஆயினும் அவர்கள் அமைத்த சிவஞானசித்தித்திறவுகோல் என்ற நூல் எனக்குப் பெருவிருந்தாயமைந்தது.

சைவசித்தாந்தத்தில் 'அத்துவா' என்ற கருத்தமைவு (Concept) ஒன்று உண்டு

சிவபரம்பொருளை 'அத்துவாமூர்த்தி' என எடுத்து மொழியும் சைவசித்தாந்தம்.

**'அத்துவா மூர்த்தி யாக**
**அறைகுவது என்னை என்னின்**
**நித்தனாய் நிறைந்து அவற்றின்**
**நீங்கிடா நிலைமை யானும்**
**சித்துடன் அசித்திற்கு எல்லாம்**
**சேட்டிதன் ஆத லானும்**
**வைத்ததாம் அத்து வாவும்**
**வடிவுஎன மறைகள் எல்லாம்'**

என்பது சிவஞான சித்தியார் 75ஆம் திருப்பாடல்.

'ஆறத்துவாவும் அண்டத்து ஆர்ந்த அத்துவாக்களும், முன் கூறத்தகும் சிழிப்பில் கூட்டுவித்து' என்று அருளினார் கந்தர் கலிவெண்பாவிற் குமரகுருபரர்.

'அத்துவா' என்பதை 'வழி' எனப் பொதுவாக விளக்கிக் கூறும் மரபே உண்டு. சிவஞான சித்தித் திறவுகோல் என்ற நூலில் ஏழாலைக் கலைமேதை கந்தையா அவர்கள் விளக்கம் அளித்திருப்பது போற்றத்தகுந்தது.

அடுத்து, நான் முழுமையாகப் படித்த அவரது நூல் 'சித்தாந்த விளக்கிற் சைவக்கிரியைகள்' என்பது. யான் சைவத்தின் சித்தாந்தக் கொள்கையில் ஈடுபடும் அளவுக்குச் சைவக் கிரியைகளில் கவனமும் விளக்கமும் கண்டுகொள்ள முயன்றதில்லை.

'சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்' என்ற நூலில் பல அரிய நுண் பொருள்களை உண்மை விளக்கங்களை உணர்ந்து எழுதியிருப்பது போற்றவும் பாராட்டவும் வணங்கவும் தக்கது.

கிரியைகளை எதிர்த்த நிலையில் ஞானமும் ஞானத்தை எதிர்த்த நிலையில் கிரியையும் முரண்படும் நிலை வேத காலத்திலிருந்தே வெளிப்பட்டு வளர்ச்சி பெற்று வந்தநிலை. இருவகை எதிர் நிலைகளையும் இணைக்கும் முயற்சிகளில் ஈடுபட்ட பேரறிஞர்கள் பலர் உளர். அவர்களெல்லாம் வேதம், உபநிடதம் போன்றவைகளையே பெரிதும் எடுத்தாண்டு இணைக்க முயன்றனர். ஆனால் பண்டிதர் ஏழாலை கந்தையா, வேதம், ஆகமம், சைவசித்தாந்தம் ஆகிய மூன்றையும் ஏற்றுக்கொண்டு திருமுறைகளையும் இணைத்து விளக்கம் காட்டியிருப்பது மகிழ்ந்து ஏற்றுக்கொள்ளற்பாற்று.

ஆன்மார்த்தம், பரார்த்தம் என்ற தலைப்பில் ஏழாலைக் கந்தையா அவர்கள் எழுதும் விளக்கம், கிரியைகளுக்குப் புதிய உத்வேகத்தைத் தருவதாக அமைந்துளது.

பக்கம் 29 இல் 'ஞானத்தால் தொழுவார் சில ஞானிகள்' எனத் தொடங்கும் அப்பரடிகள் திருப்பாடலுக்குப் புதிய விளக்கம் தருவது போற்றத்தக்கது.

ஞானத்தால் கிரியையும், கிரியையால் ஞானவிளக்கத்தையும் மக்கட் சமுதாயம் உணர்ந்து தெளியுமாறு சமன்மைப்படுத்தி எழுதும் திறமைவாய்ந்த தவச்செல்வம் உடையவர் ஏழாலைக் கந்தையா அவர்கள் எனக்கூறி வணங்குவது சான்றாண்மையாம்.

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

உ
சிவமயம்

# ஏழாலையின் ஞான சூரியன்

பண்டிதர் தி. பொன்னம்பலவாணர்

சூரியன் தினமும் உதயகிரியில் உதயமாகி அத்தமன கிரியில் அத்தமிக்கிறான். உதயமாகி அத்தமித்தற்கிடையில் உலகிற்கு ஒளி செய்கின்றான் என ஒரு கோட்பாடு உண்டு. இதே அடிப்படையில் ஏழாலையிற் பிறந்து ஏழாலையிலேயே மறைந்த மதிப்புக்குரிய பேரறிஞர் மு. கந்தையா அவர்கள் தம் வாழ்நாளில் தம் அறிவொளியை எங்கும் பரப்பி ஒளிசெய்திருக்கின்றார். கற்பித்தல், நூல்கள் எழுதல், உரையாத்தல் என்ற வழிகளிற் பயன்செய்த இப்பெரியார் தான் தொட்ட துறைகளிலெல்லாம் தம் முத்திரையைப் பதித்திருக்கிறார். 'நூல்கள் எழுதுவது அறிவினால் அல்ல பிறவிக் கொடையாக அது வரவேண்டும்.' என்ற கருத்தைப் பண்டிதமணி சி. க. அவர்கள் தன் நூல் முகவுரை ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். இக்கருத்தின் அடிப்படையில் நூல்கள் எழுதுதற்குரிய தகுதியைத் தன் பிறப்புரிமையாகப் பெற்றிருந்தவர் மு. க. என்று துணிவாகக் கூறலாம்.

சில மாதங்களுக்கு முன் திரு. ச. வரதராசன் அவர்களும் திரு. க. சொக்கலிங்கம் எம்.ஏ. (சொக்கன்) அவர்களும் நானும் கூடி சம்பாஷித்துக் கொண்டிருந்த போது, திரு. மு. க. அவர்களின் புத்தகங்களில் ஒன்றிரண்டின் பெயரைக் குறிப்பிட்டு 'நல்ல புத்தகங்கள்; இப்படிப் பிறரால் எழுதல் இயலாது,' என்றேன். உடனே சொக்கன் அவர்கள் 'அவருடைய எல்லாப் புத்தகங்களுமே சிறப்பானவை, பயன்படுபவைதான்' என வற்புறுத்திக் கூறினார். இவ்வாறு பலதரப்பட்ட அறிஞர்களாலும் வரவேற்கத்தக்க நூல்களை எழுதுவதென்பது சாதாரண திறமையன்று.

'கதை படிப்பவர்கள் அனைவரும் கதை எழுதவிரும்புபவர்களே. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கதை எழுதிப் பிரசுரித்தலில் அக்கறை இருக்கும். ஆதலால் எந்தக் கதாசிரியனும் எல்லோரும் வரவேற்கும் கதை எழுதிப் புத்தகமாக்குவதென்பது இயலாத காரியம்' என்ற கருத்தைக் கல்கி ஓரிடத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த அடிப்படையிற் பயனுள்ள புத்தகம் ஒன்றை எழுத விரும்பும், முயலும் ஒருவரே திரு. மு. க. வின் புத்தகம் எழுதும் ஆற்றலை மதித்துப் போற்றமுடியும்.

தமிழ் இலக்கணம், இலக்கியம், சித்தாந்தம், திருமுறை, வடமொழி, ஆங்கிலம் எனப் பல துறைகளிலும் ஆழமான அறிவும் தான் பெற்ற அறிவை மிடுக்கன்சரக்கு வியாபாரம் என்றில்லாமல் எல்லோருக்கும் பயன்படச் செய்யவேண்டும் என்ற சுபாவமும் உடையவராய் விளங்கியவர் திரு. மு.க. அவர்கள்.

மாலைக் காலச் சூரியன் எல்லோர் கண்ணுக்கும் இனியகாட்சியாய் விளங்குவது போல் தன் அந்திமகாலத்தில் எல்லோராலும் விரும்பப்படும், வரவேற்கப்படும், மதிக்கப்படும் நிலையில் வாழ்ந்தமை அவரது கல்வியறிவின் தன்மையைப் பகிரங்கப்படுத்துவதாயுள்ளது.

சூரியன் மறையும் போது தன்ஒளியின் ஒரு பகுதியை அக்கினிதேவனிடம் - விளக்குக்களிடம் கொடுத்துச் செல்வதாகவும் ஒரு கோட்பாடு உண்டு. அதேபோல் இவர் மறைந்தபின்னும் இவர் அறிவொளி இவரது நூல்கள் மூலம் எழுத்துக்கள் மூலம் ஒளி செய்யும் என நாம் ஆறுதலடையப் போதிய வாய்ப்புக்களுண்டு.

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

உ
சிவமயம்

# இலக்கியகலாநிதி பண்டிதமணி மு. கந்தையா அவர்களின் தமிழ்ப்புலமை

- கு.ரஜிபன் M.A., நிறைவேற்றுப்பணிப்பாளர் சைவசித்தாந்த ஆய்வுநிறுவனம், ஏழாலை

**அறிமுகம்**

ஏழாலை எனும் கிராமம் யாழ்ப்பாணத்தின் மிகப்பெரிய கிராமங்களில் ஒன்றாகும் தொன்மையும் புலமைத்துவமும் நிறைந்த இக்கிராமத்தின் தொன்மை வரலாறு சிலப்பதிகார காலத்தில் இருந்து ஆரம்பிக்கின்றது என்ற ஐதீகக் கதைகள் உண்டு. இதன் பின்னர் ஒல்லாந்தர் காலத்தின் ஆயுதக்களஞ்சியமாகவும் ஏழாலை இருந்திருக்கிறது. இத்தகைய வரலாற்றுப் பின்புலம் மட்டும் அல்லாமல் புலமைத்துவம் நிறைந்த கிராமமாகவும் ஏழாலை இருந்திருக்கின்றது.

ஈழத்தின் கனகிபுராணம் எழுதிய நட்டுவச்சுப்பையாவில் இருந்து தொடங்கி, சி.வை.தாமோதரம்பிள்ளை ஊடாக புலமைத்துவ பாரம்பரியம் அல்லது பரம்பரை ஒன்று இன்றுவரை இக்கிராமத்தில் இருந்து வருகின்றது. ஈழத்தில் தோன்றி பரராசசேகரம், செகராசசேகரம் எனும் மருத்துவ நூல்கள் ஏழாலையில் இருந்த அச்சியந்திர சாலையில் அச்சடிக்கப்பட்டதாகவும் ஒரு செய்தி உண்டு ஏழாலையின் புலமைத்துவ பாரம்பரியம் என்பது பழந்தமிழ் இலக்கிய பாரம்பரியம், சமயப்பாரம்பரியம், சுதேச மருத்துவ பாரம்பரியம், கூத்துக்கலைப் பாரம்பரியம், கிராமிய வழிபாட்டுப் பாரம்பரியம், நவீன இலக்கியப் பாரம்பரியம், நாடக பாரம்பரியம் என பல்பரிமாணங்களைக் கொண்ட ஒரு பாரம்பரிய புலமைத்துவம் கொண்ட கிராமமாக விளங்கும் ஏழாலையில் பண்டிதர் மு.கந்தையா அவர்களின் பிறப்பு அமைகின்றது.

**பண்டிதர் மு.கந்தையா அவர்களின் குடும்பச்சூழல்**

ஏழாலையின் விவசாயக் குடும்பத்தில் பிறந்த பண்டிதர்அவர்கள் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்தே தனது கல்வியைத் தொடர்ந்திருக்கின்றார். சிறுவயது முதல் நூல்களை வாசிக்கும் ஆர்வம் கொண்டு இறக்கும் வரையும் நூல்களை தேடித்தேடி வாசிப்பதிலே ஆர்வம் கொண்ட தேடல் உள்ளவராகவே விளங்கி இருக்கின்றார். சிறுவயதில் மாட்டுக் கொட்டிலுக்குள்ளேயே இருந்து நூல்களை வாசிப்பவராக இருந்திருக்கிறார் என்பதை பலர் அறியக் கேட்டிருக்கின்றேன்.

இத்தகைய ஏழ்மைச் சூழ்நிலையிலும் தனது விடாமுயற்சியினால் பண்டிதர் பரீட்சையில் சித்தி அடைந்து தமிழ் ஆசியரியராக தனது பணியினை தொடர்ந்திருக்கின்றார். ஆசிரியப் பணியில் இணைந்த பின்னர்தான் இளங்கலைமானிப் பட்டத்தினை தனது பெற்றிருக்கின்றார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதத்தில் மிகுந்த புலமை உடையவராக விளங்கியவர் பண்டிதர் அவர்கள்.

**பண்டிதரும் தமிழ்ப்புலமையும்**

பண்டிதர் மு.கந்தையா அவர்களை தமிழ் உலகம் ஓர் ஆளுமை உள்ள சைவசித்தாந்தியாக மட்டுமே அடையாளப்படுத்தி வைத்திருக்கின்றது. ஆனால் அதற்கும் அப்பால் அவரை ஒரு தமிழ்ப்புலமையாளர் என்று ஆய்வுலகம் கண்டுகொள்ளவில்லையோ என்ற சந்தேகம் எழுந்துள்ளது. மதுரைத்தமிழ்ப் பண்டிதர் பரீட்சையில் சித்தியெய்திய கந்தையா அவர்கள் இறக்கும் வரையிலும் அவரது பெயரை உச்சரிப்பதை விட பண்டிதர் என்றே அனைவராலும் அழைக்கப்பட்டார்.

**பண்டிதரின் இலக்கணப்புலமை**

தமிழ் இலக்கணங்கள் பற்றிய ஆழ்ந்த புலமையுடையவராக பண்டிதர் அவர்கள் விளங்கினார். பண்டித வகுப்புக்களில் தமிழ் இலக்கணங்களை ஐயந்திரிபறக் கற்றும் ஆசிரியராக இருந்திருக்கின்றார். குறிப்பாக தமிழ் எழுத்துக்களின் பிறப்புப் பற்றிய தெளிவான இலக்கண அறிவினை கொண்டிருந்திருக்கின்றார். தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம் போன்ற இலக்கணங்களைத் துறைபோகக் கற்றிருந்திக்கின்றார். அவரது இலக்கணப்புலமை தொடர்பாக அவரால் இலக்கண நூல்கள் எதுவும் எழுதப்படவில்லை.

**பண்டிதரின் யாப்பிலக்கணப்புலமை**

தமிழ் இலக்கணப்புலமையில் இருந்து பண்டிதரின் யாப்பிலக்கணப்புலமை தனியே ஆராயப்பட வேண்டியதொன்றாகும் . யாப்பிலக்கணத்தில் மிகுந்த ஆளுமை உடைய பண்டிதர் அவர்கள் யாப்பிலக்கணத்தினை கற்பிக்கின்ற ஆசிரியராக இருந்தது மட்டுமன்றி யாப்பறி புலவராகவும் இருந்திருக்கின்றார். பல்வேறு வகையான யாப்பு வடிவங்களைக் கையாண்ட பலநூறு செய்யுள்களை இயற்றி இருக்கின்றார்.

**பண்டிதரின் பிள்ளைத்தமிழ் இலக்கிய முயற்சி**

யாழ்பாணத்தினுடைய இலக்கியப்பாரம்பரியத்தில் பிள்ளைத்தமிழ் பிரபந்தங்களுக்கு தனியான இடம் உண்டு. பத்தொன்பதாம் நூற்றாண்டு இருபதாம் நூற்றாண்டு வரை பெருமளவிலான பிள்ளைத்தமிழ் பிரபந்தங்கள் யாழ்ப்பாணத்தில் தோன்றி இருக்கின்றன. யாழ்ப்பாணத்தில் தோன்றிய இந்தப் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தங்கள் இறைவன் மீது பாடப்பட்ட பிரபந்த வகையினதாகவே அதிகம் உள்ளன.

இந்தவகையில் பண்டிதர் அவர்களாலும் பல ஆலயங்கள் மீது பிள்ளைத்தமிழப் பிரபந்தங்கள் பாடப்பட்டுள்ளன. சுதுமலை அம்மன் பிள்ளைத்தமிழ், மாயவன் பிள்ளைத்தமிழ், நாவலர் பிள்ளைத்தமிழ், மாவைபிள்ளைத்தமிழ், புவனேஸ்வரி அம்மன் பிள்ளைத்தமிழ் போன்ற பிள்ளைத்தமிழ் நூல்கள் அவரது யாப்பிலக்கணப் புலமையின் வெளிப்பாடுகளாக உள்ளன. இவற்றில் நாவலர் பிள்ளைத்தமிழ், மாவை பிள்ளைத்தமிழ் இவரது யாப்பிலக்கணப் புலமையின் உச்சமாக குறிப்பிடலாம்.

**பண்டிதரின் ஊஞ்சல் பாடல்கள், திருப்பள்ளி எழுச்சி, இலக்கிய முயற்சி**

செய்யுள் புனைவதில் வல்லுநரான பண்டிதர் அவர்கள் பிள்ளைத்தமிழைத் தொடர்ந்து இலங்கையின் பலபாகங்களிலும், புலம்பெயர் நாடுகளிலும் உள்ள பல ஆலயங்களுக்கு திருப்பள்ளி எழுச்சி, ஊஞ்சல் பாட்டு போன்றனவற்றினைப் பாடியுள்ளார். இவரது இந்த முயற்சிகள் இதுவரை முழுமையாக அடையாளப்படுத்தப்படாமல் உள்ளன. ஏழாலை கருணாகரப்பிள்ளையாருக்காக இயற்றிய ஊஞ்சல்பாடல், திருப்பள்ளி எழுச்சி என்பவை விதந்து குறிப்பிடக்கூடியவை.

அவரது பாட்டுத்திறன் ரசனைக்கு ஒரு சான்று. ஒரு முறை அவர் வளர்த்த ஆடு குட்டிபோட்டு அந்த குட்டியின் கால் ஒரு முறை முறிந்தபோது மிகவும் மனவருத்தம் அடைந்து அதனது காலுக்கு கட்டுப்போட்டு அந்த ஆட்டுக்குட்டிக்கென்று ஓர் ஊஞ்சல் பாட்டு இயற்றிப் பாடி இருக்கின்றார். அந்தப்பாடல் தற்பொழுது கிடைக்கவில்லை. எனவே ஊஞ்சல் பாடல்கள் பாடுவதிலும் வல்லவராகப் பண்டிதர் அவர்கள் விளங்கி இருக்கின்றார்.

**பண்டிதரும் காப்பிய முயற்சிகளும்**

ஈழத்துத் தமிழ் இலக்கியப்பரப்பில் காப்பிய முயற்சிகள் என்பது மிகவும் அரிதாகவே இடம்பெற்றிருக்கின்றன. ஈழத்தில் தோற்றம் பெற்ற அநேக காப்பியங்கள் சமயம் சார்ந்தவையாகவே இருக்கின்றன. இருபதாம் நூற்றாண்டு வரைக்கும் ஈழத்தில் காப்பிய

முயற்சிகள் இருந்திருக்கின்றன. ஈழத்தில் மிக அண்மையில் தோன்றிய காப்பியங்களாக பண்டிதர் சச்சிதானந்தம் அவர்களின் யாழ்ப்பாணக்காவியம், பருவப்பாலியர் படும்பாடு என்பனவும் பண்டிதர் மு.கந்தையா அவர்களினால் இயற்றப்பட்ட திருக்கேதீச்சர மான்மியமும் ஆகும் . இதில் பண்டிதர் அவர்களினால் இயற்றப்பட்ட காப்பியம் சமயக்காப்பியம் ஆகும். திருக்கேதீஸ்வர நாதரை தன்னிகரில்லாத் தலைவனாகக் கொண்டு ஐந்து காண்டங்களாக பாடப்பட்ட காப்பியமே திருக்கேதீஸ்வர மான்மியம் ஆகும். ஈழத்தில் தோற்றம் பெற்ற காப்பியங்களில் ஆழந்த புலமையுடைய காப்பியங்களில் ஒன்றாக இது விளங்குகின்றது. பண்டிதர் அவர்களின் யாப்பிலக்கணப்புலமையின் சிகரமாக திருக்கேதீஸ்வரமான்மியம் விளங்குகின்றது.

**பண்டிதரின் பாடல் இயற்றும் திறன்**

பண்டிதர் அவர்களின் பாடல் இயற்றும் திறனானது மிகவும் வேகம் கொண்டதாக இருந்திருப்பதை நான் நேரிலேயே கண்டிருக்கின்றேன். அவரது திருக்கேதீஸ்வர மான்மியத்தின் மூன்றாவது தொடக்கம் ஐந்தாவது காண்டம் வரை பண்டிதர் அவர்கள் சொல்லச்சொல்ல நானே எழுதி இருக்கின்றேன். தனிமையான இயற்கைச் சூழலில் இருவரும் கதிரை போட்டு அமர்ந்து கொண்டு பல்வேறு நூல்களையும் தனக்கு அருகில் வைத்துக் கொண்டு அவற்றினை படித்துப்படித்து தனது தலையினை தடவிக்கொண்டு செய்யுள் அடிகளை மிக வேகமாகவே சொல்லிக்கொண்டு போவார். ஆரம்பத்தில் அவருடைய வேகத்திற்கு என்னால் எழுதமுடியாமல் போன சம்பவங்களும் உண்டு. மிகவும் நேர்த்தியான சொல்லாடல்களை கையாளும் திறன் கொண்டவர் பண்டிதர் அவர்கள். சொற்பஞ்சம் புலவர்களுக்கு இருக்கக் கூடாது என்பதற்கு இணங்கப் பல புதிய புதிய சொற்களைக் கையாண்டவராகப் பண்டிதர் அவர்கள் விளங்குகின்றார்.

தமிழ்த்தேசிய அரசியல் விடுதலைப் போராட்ட உணர்வு கொண்டவரான பண்டிதர் அவர்கள் திருக்கேதீஸ்வர மான்மியத்தின் பல பாடல்களின் அடிச்சொல்லு தமிழீழமே என்றுதான் முடித்திருந்தார். பின்னர் இந்தியாவில் அச்சுக்காக அவரும் நானும் கொண்டு செல்ல வேண்டி இருந்ததால் பலவற்றினைப் பின்னர் மாற்றி இருந்தார். எனவே காப்பிய முயற்சி என்பது இலக்கிய முயற்சிகளில் மிகவும் ஆழமானது ஆகும். அந்த அழத்தினை மிக லாவண்யமாகப் பண்டிதர் அவர்கள் செய்து காட்டி இருப்பது யாப்பறி புலவன் என்ற கூற்றுக்குச் சரியாகவே அமைகின்றது.

**பண்டிதரின் திருக்குறள் ஒழிபியல் உரைத்திறன்**

பண்டிதர் அவர்களின் தமிழ்ப்பணி, தமிழ்ப்புலமை என்பவற்றிற்கு சிறந்த எடுத்துக்காட்டு, அவர் திருக்குறள் ஒழிபியலுக்கு எழுதிய உரைத்திறனாகும். இந்த உரையினையும் அவர் சொல்லச் சொல்ல நான் அருகிருந்து எழுதியமையினால் அவரது தமிழ் ஆழ்புலமையினையும் பல நூல்களின் தேடல் தன்மையினையும் நேர் சாட்சியாக கண்டிருக்கின்றேன்.

திருக்குறள் ஒழிபியலுக்கான உரையானது யாழ்ப்பாணம் முழுவதும் இடம்பெயர்ந்து சென்று மீள் குடியேறியபின்னர், வெளிப்போக்குவரத்துகளுக்கு அஞ்சி ஊர்மக்கள் இருந்த வேளை, காலை ஆலய வழிபாடு முடிவடைந்த பின்னர் அவரது இரண்டாவது மகள் வீட்டில் வீட்டைச் சூழ உள்ளவர்கள் வந்து காலையில் ஒன்றாக அமர்ந்து இருக்க ஒருநாளைக்கு ஒரு குறளுக்கான விளக்கம் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை சொற்பொழிவாக இடம்பெற்றிருக்கின்றது. அதன் பின்னர் எனக்கு திருக்குறளை கற்பிக்கும்போது, எமது உரையாடலின் போது, ஒழிபியலுக்கு ஓர் உரையினை நீங்கள் எழுதினால் என்ன என்று நான் கேட்டபோது, 'ஓமடா நல்லவேலை தொடங்குவம்' என்று தொடங்கி எழுதப்பட்டதே திருக்குறள் ஒழிபியல் உரை ஆகும். எனைய உரைகளை விட இந்த உரைக்குரிய சிறப்பு என்னவெனில் இதில் மரபு சார்ந்த உரையும் உண்டு; நவீன உரைநடையில் உள்ள உரையும் உண்டு. பண்டிதர் அவர்களின் இலக்கணப்புலமையினை இந்த உரைகளின் மூலம் கண்டு கொள்ளலாம். அவரது தமிழ்ப்புலமையின் ஆளுமைக்கு இந்த உரை ஒரு தக்க சான்று ஆகும்.

**பண்டிதரின் வடமொழி இலக்கணப் புலமை**

பண்டிதர் அவர்கள் வடமொழியிலும் மிகுந்த பாண்டித்தியம் பெற்றவராக விளங்கி இருக்கின்றார். வடமொழியின் கிரந்தம், நாகரம் என்ற இரண்டு வடிவங்களிலும் கைதேர்ந்தவராக நிறைய வடமொழி நூல்களை கற்றிருக்கின்றார். வடமொழி இலக்கணத்தினையும் துறைபோக கற்றிருக்கின்றார் அவரது வடமொழி இலக்கணம் தொடர்பான அறிவினை அவரது உரைகளிலும் கைலாசபதி ஸ்மிருதி, பெரியபுராண சூசனத்திலும் கண்டுகொள்ளலாம்.

**முடிவுரை**

ஈழத்து தமிழ் இலக்கியச் சூழல் பத்தொன்பதாம் நூற்றாண்டு மிகவும் காத்திரமாக இயங்கி இருக்கின்றது. அத்தகைய சூழலில் உருவாகி வந்தவர்கள் தமிழ் இலக்கியத்திற்கு மிகப்பெரும் பங்களிப்புக்கள் செய்திருக்கின்றார்கள். அந்தவகையில் பண்டிதர் அவர்களின் தமிழுக்கான பங்களிப்பாக பிள்ளைத்தமிழ், பிரபந்த மரபினை வளர்த்தமை, காப்பிய மரபினை வளர்த்தமை, உரைமரபினை வளர்த்தமை, இலக்கணப்பாரம்பரியத்தினை வளர்த்தமை எனக் குறிப்பிடலாம். எனவே பண்டிதருடைய தளமானது தமிழ் இலக்கியத்தளம், சமயத்தளம் என இரண்டு தளங்களில் இயங்கி இருக்கின்றது.

**இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. க. வின்**
**நாவலர் பிள்ளைத்தமிழ் என்னும் நூலுக்கு**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்**
**துணை வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் வழங்கிய**
**அணிந்துரையிலிருந்து**

யாழ்ப்பாணப் பிரதேச உணர்வினையும் கலாசார நோன்மையையும் தன் புலமை நயத்தையும் ஒருங்கிணைத்துச் செய்யுளாக்கி ஆசிரியர் நாவலர் புகழ் பாடியுள்ளார். நாவலரைப் பற்றி எழுந்த நூல்களிலே வேறுபட்டதும், புதிய மரபிலே அமைக்கப்பட்டதும் ஆதல் இந்நூலின் சிறப்புக்கள் என்பதில் ஐயமில்லை. இதனை அவதார நோக்கமாக எழுந்த செய்யுள் காட்டி நிற்கிறது. 100 பாடல்களிலே பிள்ளைமை வரலாற்றைக் கூறுவதுடன் விரிவான விளக்கவுரையும் இணைக்கப்பட்டுள்ளமை கற்போர்க்குப் பயன் தருவதாகும்.

தமிழர்களது மொழி, தேசம், சமயம் என்ற மூன்றம்சங்களையும் நிலைநிறுத்த வேண்டித் தன் வாழ்க்கையை அர்ப்பணித்த நாவலரது வளர்ச்சி நிலையை வெளிப்படுத்திக் காட்டும் நாவலர் பிள்ளைத் தமிழ் தமிழிலே எழுந்த பிள்ளைத் தமிழ்ப் பிரபந்த வரிசையிலே கௌரவமாக இடம்பெறத் தக்கது. காலத்தின் தேவை கருதி இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தித் தமிழை வளம்படுத்தும் முயற்சி இனி வளர்ச்சியுறுதற்கு இந்நூலின் தோற்றம் ஒரு நல்ல அறிகுறியாகும். ஈழத்துச் செய்யுளிலக்கிய வரலாற்றுப் பரப்பினை அணி செய்ய இத்தகைய செய்யுளிலக்கியங்களின் தோற்றம் மிகவும் அவசியமானதாகும்.

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்

உ
சிவமயம்

## ஏழாலையூர் இலக்கியகலாநிதி, பண்டிதமணி மு. க. அவர்கள்

- அமரர் முதுபெரும் புலவர் வை. க. சிற்றம்பலம்

### ஏழாலையூர் - 1

அருளானந் தசிவமாம் பொன்னை யாவும்
அவர்சகோ தரர்வைத் தியகலா நிதியாம்
திருவாளன் பேரம்பலம் அவரின் மைந்தன்
செப்பும்பல் கலைக்கழகம் திகழ்ந்து வாழ்ந்த
அருளாளன் பேரா சிரிய னான
அரனடிசேர் கனகசபா பதியு மன்றிக்
குருபாத மடைந்தஞா னப்பிரகா சத்தை
குமரராய்ப் பெற்றதே மூாலை யூரே

### ஏழாலையூர் - 2

தெய்வபத மடைந்தஆத்ம சோதி யான
திருவாளன் முத்தையா உபாத்தி யாயர்
சைவப் புலவர்சச்சி தானந் தாவும்
சாற்றும்பல பெரியார்கள் சார்ந்த தாயும்
கைவந்த தமிழுடனே வட மொழியும்
கருதுமாங் கிலம்பாளி கற்றே யின்று
தெய்வபத மடைந்தகந்தை யா பீ.ஏ.யும்
சிறந்தமக்க ளாய்த்தந்த தேழலை யூரே

### சைவம் தமிழ் வளர்த்தவர்

சங்கநூ லாய்ந்தபண் டிதரே யென்றும்
சார்ந்தசைவ சித்தாந்தக் கருவூ லத்தின்
பங்குடைய பெரியவரா மிவரே யென்றும்
பாடும்பெருங் கவிராய ரிவரே யென்றும்
பொங்குதமிழ் நாவலரைப் போற்றி வாழ்ந்த
புண்ணியனார் கண்ணியனார் இவரே யென்றும்
ஐங்கரர்கரு ணாகரர்க்கும் உவந்தா ரென்றும்
அகிலம்கந் தையாவையென்றும் அழகாய் வாழ்த்தும்.

நன்றி - சித்தாந்த ஞானக்களஞ்சியம்.

உ

சிவமயம்

# தமிழர் சமயநெறிக்குப் பெயர் சைவம் அல்லதில்லை

இலக்கியகலாநிதி. பண்டிதமணி. மு. கந்தையா.BA(Hons)

தமிழர் சமயநெறி சிவனையே முழுமுதல் இறைவனாகக் கொண்டு வழிபட்டுச் சிவனை ஆன்மா சென்றடையும் இலட்சியமுள்ள ஒரு தனி நெறியாகும். இம்மை, மறுமை, அம்மை மூன்றுக்கும் சிவன் சார்பை விடாதிருக்கும் நெறி ஆதலால் இது சைவம் எனப்பட்டது. சைவம் சிவனுடன் சம்பந்தம் ஆவது என இத்தன்மையை புலப்படுத்தியுள்ளார் திருமூலர்.

வேதத்தோடு ஒத்த பழமை உடையன எனப் பேசப்படுஞ் சிவாகமங்களில் இவ்வியல்பு ஆணித்தரமாக நிலை நிறுத்தப் பெற்றுள்ளது. அதற்கடுத்தபடி பழமை வாய்ந்தனவாகிய சங்க இலக்கியங்களில் தற்போது கிடைக்கக் கூடியனவாகவுள்ள சிலவற்றில் இதற்காதாரமுண்டு. மத்திய காலத்தில் தக்ஷிண தேசத்தில் நிலவிய சைவ மடங்கள் சிவாகம ஆய்வியல் ரீதியாக இவ்வுண்மையை விளக்கிப் பலவேறு நூல்களாகப் பிரசுரித்திருக்கின்றன. தொடர்ந்து வந்தருளிய சைவ சமயாசாரியர்கள் இதனை உரத்த குரலிற் பிரகடனப்படுத்தியுள்ளார்கள். அவர்களின் அருளிப் பாடல்களான திருமுறைகள் இதனை மக்கள் மனங்கொள்ள அழுத்தி வைத்திருக்கின்றன. தொடர்ந்து வந்த சந்தானாசாரியர்கள் தங்கள் மெய்கண்ட சாத்திரங்களால் தருக்க ரீதியாக ஆராய்ந்து சித்தாந்தஞ் செய்திருக்கிறார்கள். அடுத்துத் தோன்றிய ச்சைவாதீனங்கள் ஆதீன அமைப்பில் வைத்து இதனைப் பேணியுள்ளன. நம்மவராகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உன்னதத் தொனியில் இதனை மீள் பிரகடனம் பண்ணி வைத்திருக்கிறார். அவர் வழி மரபு பேணிய ஆன்றோரெல்லாம் அதனை வழிமொழிந்து வந்திருக்கிறார்கள். தமிழகத்துச் சிவாலயங்களெல்லாம் இவ்வுண்மைக்குக் கலங்கரை விளக்கமாய் நிலவிக்கொண்டிருக்கின்றன. நீண்ட இவ்வரலாற்றுத் தொடரில் எங்கேனுந் தமிழர் சமய நெறிக்குச் சைவம் என்ற பெயரல்லது வேறெதுவுங் காணப்பட்டதில்லை.

இனி 'பண்டு நால்வருக்கு அறமுரைத்தருளிப் பல்லுலகினில் உயிர் வாழ்க்கை கண்ட நாதனார்' என்பது நமது திருக்கேதீச்சரத் தேவார உண்மைகளிலொன்று. அநாதி தொட்டே பல வேறு ஊழிகளாகப் பலவேறு உலகுகளில் உயிர் வாழ்க்கை நிகழக் கண்டவர் சிவபெருமான். அதாவது காலா காலமாக உயிர்கள் வாழ்ந்து ஈடேற ஆவனவெல்லாம் அறிந்து இயற்றிக்கொண்டிருப்பவர் அவர் என்பது இதன் தாற்பரியம். அதன் சார்பில் தன் கருணைக் கைங்கரியமாகிய ஐந்தொழில் நிகழ்த்த வேண்டியவர் அவர். அதில் விசேடமாக, அவ்வப்போது தர்மத்தை அழிக்க முற்படும் அசுரசக்திகளை நாசம் பண்ணவேண்டியவர் அவர். மெய்யுணர்ந்து தன்னை நாடும் பக்குவ ஆன்மாக்களுக்கு அவ்வப்போது வேண்டுவன செய்தற்கு உருக்கொண்டு பிரசன்னமாக வேண்டியவரும் அவர். அந்நோக்கில் அவர் தாமாக மேற்கொண்டு காட்சியளிக்கும் உருவபேதங்களும் பல. பல பல வேடமாகும் பரன் நாரிபாகன் என்பது பலரும் அறிவதொன்று. அக்கோலங்களே, சக்தி, விஷ்ணு, விநாயகர், குமரன், வைரவர், வீரபத்திரர் முதலியனவாக உள்ளவை. மகான் ஒருவரை அபிமானிக்கிறவர்கள் அவர் பல பல நிலைகளில் தோன்றும் நிழற் படங்களையெல்லாம் பேணிப் போற்றுதல் போலச் சிவபெருமானை முழு முதல்வனாக வழிபடுவோர், அவர் தாமாக மேற்கொண்ட வடிவ பேதங்களையும் வழிபடுதல் இயல்பே. மிகப் பழங்காலந் தொட்டே அவ்வழக்கம் இருந்திருப்பதாற் சிவாகமங்களிலேயே அவற்றைச் சிவாலயங்களிற் பரிவார மூர்த்திகளாக நிறுவி வழிபடுதற்காம் வகைதுறைகள் வகுக்கப்பட்டாயின.

அதற்கிணங்கச் சிவனை மூலமூர்த்தியாகக் கொண்ட கோயில்களில் சிவவழிபாட்டோடு ஒருமுகப்பட்ட வழிபாடாக அம்மன், விஷ்ணு முதலிய மூர்த்திகளின் வழிபாடும் நிகழ்ந்து வருகையில், வழிபடுவோர் அம்மூர்த்திகளில் தமது அதிக பிரியத்திற்குரிய ஒன்றுக்குத் தனிக் கோயிலொன்றமைத்து அதன் மூலஸ்தானத்தில் அமர்த்தும் மூர்த்தியைச் சிவமாகவே பாவித்து வணங்கும் வழக்கமும் உண்டாகி அவையுஞ் சிவாகமங்களில் விதிமுறை விளக்கம் பெறலாயின. அவ்வகையில் அம்மன் கோயில், விஷ்ணு கோயில், விநாயகர் கோயில், குமரன் கோயில், வைரவர் கோயில்கள் பல்கியபோதும் அனைத்துஞ் சிவாலயமென்ற வழக்கில் வேறுபட்டதுமில்லை. நித்திய நைமித்திக அனுசரணைகளில் வேறுபட்டதுமில்லை. அன்றுமப்படி, இன்றுமப்படி. இது மாறாநியதியாகவே இருந்து வருகிறது. சூரியன் மத்தியில் சிவன் விசேடமாகப் பிரகாசிக்கிறார் என்ற உண்மையையும் சிவகதி சேரும் ஆன்மா சூரிய மண்டல வழியாக மேற்செல்கின்றது என்ற உண்மையையும் ஒட்டிச் சிவாலயங்களிற் சூரியமூர்த்திக்கும் பரிவாரத்திற் கோயிலுண்டு. சூரியமூர்த்தியில் அபிமானமுற்ற யாரோ ஒரிசா நாட்டிற் சூரியனுக்கே, எட்டுச்சில்லுத் தேர் வடிவில் பிரமாண்டமான கருங்கற் சிற்பக் கோயில் எழுப்பியிருக்கிறார்கள். அதுவுஞ் சிவாலயமே தான். இப்படியாக வெவ்வேறு மூர்த்திகளின் பேரில் அமைந்த ஆலயங்களில் நடைபெறும் பூசை வழிபாடுகளும் யதார்த்தத்திற் சிவாலய பூசையும் சிவ வழிபாடுமேதான்.

இ∴திருக்க, வழிபாட்டிலக்கணமும் இலட்சியமும் அறுதியான ஆன்ம விமோசனம் என்ற சைவ இலக்கில் தரிக்கமுடியாது. அதிலும்பார்க்க லௌகிக சுகப்பேறு, சுவர்க்கப்பேறு முதலிய இஷ்ட சித்திப்பேறுகளே அத்தியாவசியம் என வேட்கையுற்றவர்கள் சிலர் தம் அபிலாசைப்படி அம்மனாகிய சக்திக்குச் சிவனிலும் பார்க்க முதன்மை கொடுத்தும் தம் இஷ்ட சித்திப்பேறுகளுக்குதவும் குறுக்குவழித் தந்திரங்களான யந்திர மந்திரக் கிரியா வினோதங்களைத் தழுவியும் சாக்தர் என ஒரு பிரிவினராயினர். அவ்வாறே சிவனைப் பொருள்செய்யாமை மட்டுமன்றி அவர் வழிபாட்டு முறையையே நிராகரித்து விட்டு, விஷ்ணுவை முழுமுதல் தெய்வமாகக் கொண்டு தம்மில் தாம் பிரிந்து வைஷ்ணவந் தோற்றினர் சிலர். தங்கள் நிலையை யதார்த்தப்படுத்திக் கொள்ளுதற்கான ஆகம நூல்களையும் இவர்கள் தாமாக ஏற்படுத்திக் கொண்டு அவற்றின் தொன்மையை நிரூபிக்குஞ் சில பல ஏதுக்களையும் தயார் செய்து வைத்துக்கொண்டனர். இந் நிலைமைகளை அவதானித்த ஆய்வியலாளர்கள் சைவம் போல இவையும் இயல்பான அநாதிச் சமயங்களென்று கொண்டு இவை யெல்லாவற்றையும் உள்ளடக்கும் பெயரொன்றை நாடினர். மேற்றிசை நாட்டாரான பாரசீகர் இந்தியாவில் முதலில் சிந்து நதிக்கு இப்பாற்பட்ட சமூக கலாசார நிலைமைகளுக்குத் தம் மொழியில் இட்டு வழங்கி பின் பிற தேசத்தவர்கள் எல்லாரும் வழங்கத் தொடங்கிவிட்ட இந்து என்ற பெயர் அவர்களுக்குக் கைகொடுப்பதாயிற்று. அதிலிருந்து தோன்றிய வழக்கமே இந்து சமய வழக்கமாகும்.

இந்நாளில் உலகின் பலபகுதிகளிலும் கிடைத்துவரும் அகழ்வாராய்ச்சிச் சான்றுகளின்படி சைவம் அகில உலக சமயமாயிருந்தமை நிரூபிக்கப்படுகிறது. அதிலும் பார்க்க வலுமிகு அத்தாட்சிச் சான்றுகள் சைவம் அகில இந்திய சமயமாயிருந்தமைக்கும் உளவாம். அந் நோக்கில் மேற்கண்ட விளக்கத்திற் பொருந்தாமை ஏதும் இருத்தல் இயலாதாகும். தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி என்பது திருவாசகம். இதன் பிரகாரம் அகில இந்தியாவில் எந்நாடுகளும் மதம் வேறுபட்டுப்போயும் தென்னாடு சைவமுடையதாகவே இருந்து வருதல் கண்கூடு.

அ∴திருக்க, பிற நாட்டார் தம் வழக்கத் தேவைகளுக்காக இட்டமைத்துக்கொண்ட இந்து சமயம் என்ற பெயர் சைவர் வாழும் நம்நாட்டு வழக்கத்திற்கு ஏற்புடைத்தாமாறு

தொடர்ச்சி 46ஆம் பக்கம்

உ
சிவமயம்
**ஏழாலை**
*இலக்கியகலாநிதி, பண்டிதமணி*
***அமரர் மு. கந்தையா B.A. அவர்களின்***
## நூறாண்டு அகவை நிறைவு விழா

**காலம்** : 02.07.2017 ஞாயிறு மாலை 3.00 மணி
**இடம்** : ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித்தியாலயம்
**தலைவர்** : சித்தாந்தரத்தினம் வே. கனகசபாபதி அவர்கள் (யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்)

**முன்னிலை**

* நல்லை ஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ***ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்***
* முத்தமிழ்க்குருமணி, சகலாகமசங்கிரகர் ***சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்*** சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானம்

**முதன்மைவிருந்தினர்**

* பேராசிரியர் **இ.குமாரவடிவேல்** அவர்கள் மேனாள் விஞ்ஞான பீடாதிபதி - யாழ். பல்கலைக்கழகம்
* பேராசிரியர் கலாநிதி ***நா. சண்முகலிங்கன்*** அவர்கள் மேனாள் உபவேந்தர் யாழ். பல்கலைக்கழகம்

- புத்தகக் கண்காட்சி
- நினைவு நூல்கள் வெளியீடு
- கலை நிகழ்ச்சிகள்
- பரிசு வழங்கல்

அன்பர்கள் யாவரும் வந்து கலந்து சிறப்பித்துப் பயன் பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

பண்டிதர் மு.க. நூல் வெளியீட்டுக் கழகவிழாக் குழுவினர்

45ஆம் பக்க தொடர்ச்சி...

இல்லை. சைவத்தின் உண்மை இயல்பைப் பிரதிபலிக்கும் தன்மை அச்சொல்லுக்கு இல்லவே இல்லை. அதனால் அச்சொல் வழக்குப் பிரபல்யமான பின்தோன்றிய சைவ நூல்களில் அது இடம்பெறவில்லை. பண்டிதமணி சி. க. இறுதியாக உள்ள சைவச் சான்றோர் வாக்கில் என்றேனும் எங்கேனும் அது இடம்பெற்றதில்லை. 1906இல் சேர். பொன். இராமநாதன் அமெரிக்காவுக்குப் பயணஞ் செய்த கப்பலில் நிகழ்ந்த சம்பாஷணையொன்று அது சம்பந்தமான நூலிலுள்ளது.

ஒரு அமெரிக்கர் : ஐயா உங்கள் சமயம் இந்து சமயமா?

இராமநாதன் : அதுவா நாங்கள் சிவனை வழிபடுகிறவர்கள். எங்கள் சமயம் சைவம். பிற நாட்டார் எங்கள் சமயத்தை இந்து சமயம் என்கிறார்களேயன்றி நாங்கள் இந்து சமயத்தவர்களல்லர். அவ்வழக்கை நாங்கள் ஏற்கவில்லை.

## நிகழ்ச்சிநிரல்

- **மங்கல விளக்கேற்றி அஞ்சலி செய்தல்**
- **திருமுறை ஓதல்** - டாக்டர் கு. விக்னேஸ்வரன் அவர்கள்.
- **ஆசியுரை** - நல்லை ஆதீன சுவாமிகள்
  - சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக்குருக்கள் அவர்கள்
- **வாழ்த்துரை** - பண்டிதர் வ. பேரின்பநாயகம் அவர்கள்
- **வரவேற்புரை** - சைவப்புலவர் கு. றஜீவன் அவர்கள்
  சைவசித்தாந்த ஆய்வு நிறுவனம்
- **தொடக்கவுரை** - கலாபூஷணம், சைவப்புலவர் சு. செல்லத்துரை அவர்கள்
  பண்டிதர் மு. க. நூல் வெளியீட்டுக் கழக செயலாளர்.
- **புத்தகக் கண்காட்சி திறந்துவைத்தல்** :-
  - திரு. இ. கணேசராசா அவர்கள்
  ஏழாலை சித்திவிநாயகர் நூலகத் தலைவர்.
- **பரிசுப் பேச்சுக்கள்**- பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்கள்
- **சைவநீதி சிறப்புமலர் வெளியீட்டுரை**
  - திரு. முருகேசு கௌரிகாந்தன் அவர்கள்
  முதுநிலை விரிவுரையாளர், யாழ். தேசிய கல்வியியல் கல்லூரி
- **திருமுறைத் தேம்பிழி வெளியீட்டுரை**
  - சைவப்புலவர் சித்தாந்தச்செம்மணி செ. நவநீதகுமார் அவர்கள்
  இயக்குனர், திருவாவடுதுறை ஆதீனச் சித்தாந்தப் பயிற்சி மையம்
- **சித்தாந்தம் சிறப்பிதழ் வெளியீட்டுரை**
  - சைவப்புலவர் சி. ரமணன் அவர்கள்
  விரிவுரையாளர் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை
- **விருந்தினர் உரை** -
- **பரிசுவழங்கல்** -
- **கலைநிகழ்ச்சிகள்** -
  **நாட்டிய அஞ்சலி** : ஏழாலை, அபிநய கலாலயம்
  **நாடகம்** : மங்கையர்க்குத் தனிஅரசி
  ஏழாலை கருணாகரப்பிள்ளையார் சாது சங்கம மட அறநெறிப்பாடசாலை
- **நன்றியுரை** - திரு. தி. ஐங்கரன் அவர்கள், ஆசிரியர்.


## *வட இந்திய யாத்திரை*

10.08.2017 தொடக்கம் 21.08.2017 வரை

சென்னை, புதுடெல்லி, ஆக்கிரா (தாஜ்மகால்), ஹரித்துவார், ரிஷிகேஷ், அலகாபாத், அயோத்தி, வாரணாசி (காசி), கயா, புத்தகயா, இராமேஸ்வரம், சென்னை.

(தங்குமிடம், உணவு உட்பட)

தொடர்புகளுக்கு : திரு. க. சபாபதி
தொலைபேசி: 071 205 5255, 077 900 8286
சென்னை: 00 91 996 295 8002

# நினைவிற் கொள்வதற்குரிய வழிபாட்டு நாட்கள்

## ஏவிளம்பி வருடம் ஆடி மாதம்

| தமிழ்த் திகதி | ஆங்கிலத் திகதி | கிழமை | விரதம் |
|---|---|---|---|
| 01 | 17.07.2017 | திங்கள் | ஆடிப்பிறப்பு. |
| 02 | 18.07.2017 | செவ்வாய் | கார்த்திகை விரதம். |
| 05 | 21.07.2017 | வெள்ளி | பிரதோஷ விரதம். |
| 06 | 22.07.2017 | சனி | கூற்றுவ நாயனார் குருபூசை. |
| 07 | 23.07.2017 | ஞாயிறு | ஆடி அமாவாசை விரதம். |
| 10 | 26.07.2017 | புதன் | சதுர்த்தி விரதம், ஆடிப் பூரம். |
| 12 | 28.07.2017 | வெள்ளி | ஷஷ்டி விரதம் |
| 13 | 29.07.2017 | சனி | பெருமிழலைக் குறும்ப நாயனார் குருபூசை |
| 14 | 30.07.2017 | ஞாயிறு | சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை. சேரமான் பெருமாள் நாயனார் குருபூசை. |
| 18 | 03.08.2017 | வியாழன் | கலிய நாயனார் குருபூசை. கோட்புலி நாயனார் குருபூசை. |
| 20 | 05.08.2017 | சனி | சனிப் பிரதோஷ விரதம். |
| 22 | 07.08.2017 | திங்கள் | பூரணை விரதம், இரவு சந்திரகிரகணம். |
| 26 | 11.08.2017 | வெள்ளி | சங்கடஹர சதுர்த்தி விரதம். |
| 30 | 15.08.2017 | செவ்வாய் | கார்த்திகை விரதம், மூர்த்தி நாயனார் குருபூசை, புகழ்ச்சோழ நாயனார் குருபூசை. |

## ஏவிளம்பி வருடம் ஆவணி மாதம்

| | | | |
|---|---|---|---|
| 01 | 17.08.2017 | வியாழன் | மாதப்பிறப்பு |
| 03 | 19.08.2017 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| 05 | 21.08.2017 | திங்கள் | அமாவாசை விரதம், புகழ்த்துணை நாயனார் குருபூசை, அதிபத்த நாயனார் குருபூசை. |
| 06 | 22.08.2017 | செவ்வாய் | இளையான்குடிமாற நாயனார் குருபூசை. |
| 08 | 24.08.2017 | வியாழன் | மறைஞான சம்பந்தர் குருபூசை. |
| 09 | 25.08.2017 | வெள்ளி | விநாயக சதுர்த்தி. |
| 12 | 28.08.2017 | திங்கள் | ஷஷ்டி விரதம். |
| 13 | 29.08.2017 | செவ்வாய் | குலச்சிறை நாயனார் குருபூசை. |
| 15 | 31.08.2017 | வியாழன் | ஆவணி மூலம், குங்கிலியக்கலய நாயனார் குருபூசை. |
| 18 | 03.09.2017 | ஞாயிறு | ஆவணி ஓணம், பிரதோஷ விரதம். |
| 20 | 05.09.2017 | செவ்வாய் | பூரணை விரதம் |
| 21 | 06.09.2017 | புதன் | மஹாளய பட்ச ஆரம்பம். |
| 24 | 09.09.2017 | சனி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| 26 | 11.09.2017 | திங்கள் | கார்த்திகை விரதம். |
| 31 | 16.09.2017 | சனி | செருத்துணை நாயனார் குருபூசை. |



பாலர் பிரிவு



கீழ்ப் பிரிவு



மத்திய பிரிவு

இலக்கியகலாநிதி பண்டிதமணி
அமரர்
மு.கந்தையா B.A.
அவர்களின்

நூறாண்டு அகவை நிறைவு
விழாப் பேச்சுப் போட்டியில்
பங்குபற்றிய மாணவர்கள்



மேற் பிரிவு



பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்கள்



நடுவர்களுடன்
பேச்சுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்கள்




இவ்விதழ் கொழும்பு திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்தப் பயிற்சி மையத்தினரால்
Sharp Graphics (Pvt.) Ltd. இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.